
ISSN 1391-9504

Price Rs. 20.00
விலை ரூ: 20.00

# விஜய்
Vijey விஜய்

27.08.2008 - மலர் 05, இதழ் 25



## தங்க மகன் பெல்ப்ஸ்

## 'சஹாரா' உயிரினங்கள்

## உலகையே சூடாக்கிய பனிப் போர்

## 'எஸ்டெரிக்ஸ்' கார்ட்டூன் கதைகள்

விலை ரூபா 12/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஹெலோ' என்பதன் ஆரம்பம்



தொலைபேசியினூடாக தொடர்பினை ஏற்படுத்தும்போது நாம் முதலாவதாக உபயோகிக்கும் சொல் 'ஹெலோ' என்பதாகும். 'ஹெலோ' என்னும் வார்த்தையே பொதுவாக எல்லோராலும் பயன்படுத்தப்படுகிறது. இந்த வார்த்தையை மக்கள் முதன்முதலாக எப்படி உபயோகிக்க ஆரம்பித்தார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா?

'ஹெலோ' என்னும் வார்த்தையை ஒரு நாளில் நாம் பல தடவைகள் உபயோகிக்கிறோம். ஏன் இந்த குறிப்பிட்ட வார்த்தையை மட்டும் உபயோகிக்கிறோம் என்று எப்பொழுதாவது நீங்கள் சிந்தித்தது உண்டா? ஹெலோ என்னும் இந்த வார்த்தையின் ஆரம்பம் பற்றி பல சுவையான தகவல்கள் உள்ளன.



இந்த வார்த்தை ஓர் ஆங்கில வணக்கத்துக்குரிய வாசகங்களின் சுருக்கம் என்று சிலர் தெரிவிக்கின்றனர். அதாவது முற்காலத்தில் மக்கள் ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்ளும்போது தெரிவிக்கும் வந்தனம். ''ஹோல் பி தோ'' (Whole be thou) என்னும் வாசகமாகும். இன்னொரு தகவலின்படி ஒரு காலகட்டத்தில் 'ஹெய்ல் தோ' (Hail thou) என்று வழங்கப்பட்ட வந்தனம் கூறும் வாசகமானது படிப்படியாக மாற்றமடைந்து 'ஹெலோ' என்னும் வார்த்தை உருவானதாக தெரிவிக்கப்படுகிறது. பிரெஞ்ச் மொழியில் 'அங்கு நில்' என்னும் வாசகம் ஹொல்லா (Holla) எனப்படுகின்றது. ஜேர்மன் மொழியில் 'நல்ல சுகம்' என்னும் வாழ்த்து வாசகம் ஹெய்ல் (Heil) என்று கூறப்படுகிறது. ஹங்கேரிய மொழியில் நான் சொல்வது உங்களுக்குக் கேட்கிறதா? என்னும் வாசகம் ஹெல்லோட் (Hallod) என்று கூறப்படுகிறது. இதற்கான பதில் ஹெல்லோம் (Hallom) என்பதாகும். அதாவது, ''நீங்கள் சொல்வது எனக்குக் கேட்கிறது'' என்பதாகும்.



இதேவேளை, ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதி ஹுல்லோ (Hullo) ஹெல்லோ (Hello) மற்றும் அவற்றிலிருந்து வந்த சொற்கள் ஹெல்லோவ் (Hallow) என்னும் ஆங்கில வினைச்சொல்லில் இருந்து வந்தவையாகுமென்று கூறுகின்றது. இதன் விளக்கம் 'உற்சாகமூட்டுதலில் சத்தமிடுவதற்கு' என்பதாகும். இந்த வார்த்தை முதன்முதலாக ஆங்கில அகராதிகளில் 1883 ஆம் ஆண்டில் பதிவாகியது.

1876 ஆம் ஆண்டு தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்ட போது அலொக்ஸாண்டர் கிரஹம்பெல் எஹொய் (Ahoy) என்னும் வார்த்தையை உரையாடல்களின் ஆரம்பத்தில் பயன்படுத்தலாம் என்று ஆலோசனை வழங்கினார். 1877 ஆம் ஆண்டு தோமஸ் எடிசன் ஹெல்லோ (Hello) என்னும் வார்த்தையை முதலாவது வாழ்த்தும் வார்த்தையாக தொலைபேசி அழைப்பின்போது பயன்படுத்தலாமென்று ஆலோசனை வழங்கினார். இதுவே இறுதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் படிப்படியாக 'ஹெலோ' என்று மாற்றமடைந்தது.

-ராஜா


## விஜய் சந்தா விபரம்

'விஜய் பத்திரிகைக்கு சந்தா செலுத்தி தபால் மூலமும், நேரடியாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

| | 1 வருடம் | 6 மாதம் |
|---|---|---|
| நேரடி விநியோகம் (கொழும்பிற்குள்) | ரூ.624/= | ரூ.312/= |
| தபால் மூலம் | ரூ.1404/= | ரூ.702/= |

பின்வரும் கூப்பனை பூர்த்தி செய்து அனுப்புங்கள்
*(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)*

பெயர்: ........................................
முகவரி: ........................................
தொ.பே.இல: ........................................
எமக்கு ............ மாதம்/வருடத்திற்கான இதழ்களை அனுப்பி வைக்கவும்.

........................ கையொப்பம் ........................ திகதி

உங்கள் சந்தாத் தொகையினைக் காசுக் கட்டளையாகவோ (Money Order), காசோலையாகவோ (Cheque) அனுப்பலாம். காசுக்கட்டளையை மாற்றும் தபால் கந்தோர் SLAVE ISLAND POST OFFICE எனக் குறிப்பிடவும். காசோலை (Cheque) அனுப்புவோர் Wijeya News Papers Ltd என்ற பெயருக்கு எழுதவும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**SUBSCRIPTION MANAGER,**
**Wijeya Newspapers Ltd.,**
**8, Hunupitiya Cross Road, Colombo-02**

மேலதிக விபரங்களுக்கு தொ.பே.இல - 0112479653


# ஸ்டெதஸ்கோப் எவ்வாறு உருவானது?



இதயத்துடிப்பை அறிவதற்கு மருத்துவர்கள் உபயோகிக்கும் 'ஸ்டெதஸ்கோப்' எப்படி உருவானதென்று உங்களுக்குத் தெரியுமா? தற்செயலாக நடந்த சம்பவமொன்றின் மூலமே இந்தக் கருவி கண்டுபிடிக்கப்பட்டது.

பிரெஞ்ச் மருத்துவரான லென்னக் 1816 ஆம் ஆண்டில் ஒருநாள் ஒரு பருத்த உடலமைப்பைக் கொண்ட பெண்ணைப் பரிசோதனை செய்ய நேரிட்டது. இதயத் துடிப்பை அறிய மார்பில் காதைப் பதிய வைத்து ஒலியைக் கேட்பதே அக்கால முறையாக இருந்தது. இம்முறையின் மூலம் அப்பெண்ணை பரிசோதனை செய்ய முடியாதவராக மனம் குழம்பிய நிலையில் வெளியில் வந்தார் லென்னக்.

அப்போது வீதியில் சிறுவர்கள் விளையாடிக் கொண்டு இருந்ததை அவர் பார்க்க வேண்டி நேர்ந்தது. நீண்ட கம்பியொன்றின் ஒரு முனையை சிறுவன் ஒருவன் நகத்தால் கீறிக் கொண்டிருக்க மறுமுனையில் இன்னொரு சிறுவன் தன் காதில் வைத்து அதனை அவதானித்துக் கொண்டிருந்தான். இதைக் கண்ட மருத்துவர் லென்னக்கின் மனதில் புதிய ஒரு யோசனை ஏற்படவே விரைந்து செயல்படலானார். தனது அறைக்குத் திரும்பி ஒரு காகிதத்தை குழாய் போல சுருட்டி அதன் ஒரு முனையை பெண்ணின் மார்பில் வைத்தும் மறுமுனையை காதில் வைத்தும் கேட்டார்.

இதயத் துடிப்பு தெளிவாகக் கேட்டது. பின்னர் மரத்தினால் குழாய் செய்து அவர் உபயோகிக்கத் தொடங்கினார்.



'ஸ்டெதஸ்' என்றால் கிரேக்க மொழியில் மார்பு என்பதாகும். அதனால், அவர் தாம் கண்டுபிடித்த கருவிக்கு 'ஸ்டெதஸ்கோப்' என்று பெயரிட்டார். கடும் எதிர்ப்புக்குப் பின்னரே அக்கருவி பிரபலமாயிற்று. படிப்படியாக பல மாற்றங்களை அடைந்தே 'ஸ்டெதஸ்கோப்' தற்பொழுதுள்ள உருவத்தை அடைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சகல சர்வதேச பாடசாலைகளும் கல்வி அமைச்சில் பதியப்பட வேண்டும்

## ஒழுக்கநெறி மேம்பாட்டு வட்டத்தின் ஆலோசனை

நாட்டிலுள்ள சகல சர்வதேச பாடசாலைகளும் கல்வி அமைச்சில் பதிவு செய்யப்படல் வேண்டும் என்பதைக் கட்டாயப்படுத்தவும் கல்வி அமைச்சின் கண்காணிப்பின்கீழ் கொண்டு வரவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என ஒழுக்கநெறி மேம்பாட்டு வட்டத்தினால் கல்வி அமைச்சுக்கு ஆலோசனையொன்றுமுன்வைக் கப்பட்டுள்ளது.



இது தவிர, வலய மட்டத்தினுள்இயங்குகின்ற சர்வதேச பாடசாலைகளின் தகவல்களைச் சேகரிக்கும் அதிகாரம் சகல வலயப் பணிப்பாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. சகல சர்வதேச பாடசாலைகளையும் கட்டணம் அறவிடுகின்ற தனியார் பாடசாலைகளாக கல்வி அமைச்சின் கீழ் பதியப்படவும் தாய்மொழி, சமயம், வரலாறு போன்ற பாடங்களை அனைத்துப் பாடசாலைகளிலும் கட்டாய பாடத்திட்டத்தினுள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்றும் அவ் அமைப்பு ஆலோசனையை முன்வைத்துள்ளது.



## குழந்தை பேசுவதற்கு உதவி புரிவோம்

கொழும்பு-10, மாளிகாவத்தை ஜும்மா மஸ்ஜித் வீதி, 211/44/ 2/6 என்ற முகவரியைச் சேர்ந்த மூன்று வயதுடைய மொஹமட் ஹசீம் என்ற இந்தக் குழந்தை, நரம்புக் கோளாறின் காரணமாக பேச முடியாத நிலையில் உள்ளார்.

இவரைச் சுகப்படுத்துவதற்கும் மருத்துவப் பராமரிப்புக்குமென பெருமளவு பணம் தேவைப்படுவதால் குழந்தையின் தகப்பனாரும் இல்லாத நிலையில், எவ்வித வருமானமுமின்றி குழந்தையின் தாயார் பெரிதும் கஷ்டப்படுகின்றார். இதன் நிமித்தம் இந்தக் குழந்தைக்கு நன்கொடைகளை வழங்க விரும்புபவர்களிடமிருந்து உதவிகளை குழந்தையின் தயாரான நோனா நஜிமா எதிர்பார்க்கின்றார். உதவிகளைப் புரிய விரும்புபவர்கள் தமது நிதியுதவியை **இலங்கை வங்கி, ரீஜன்ட் வீதி கிளையின் 1845131** என்ற வங்கிக் கணக்கிற்கு அனுப்பி வைக்கலாம்.

**தொ.பே இல-011-4902562**



# 'கக்ஸபுவா' பருந்தின் மறைவு

பிலிப்பைன் நாட்டுக்கே தனித்துவமான பருந்து இனமொன்று உள்ளது. அவற்றின் கண்கள் நீல நிறமானவை. இதுதான் அந்தப் பருந்து இனங்களுக்குரிய விசேட அம்சமாகும். அருகி வரும் இந்தப் பருந்து இனத்தை 'குரங்கை உண்ணும் பருந்து' என்றும் குறிப்பிடுகின்றனர். அத்துடன், இப் பருந்தினமானது 1994 ஆம் ஆண்டு தேசிய பறவையாகவும் பிரகடனப்படுத்தப்பட்டது.



மேலும் இவற்றை வேட்டையாடுவதற்கு பிலிப்பைன் அரசாங்கம் தடை விதித்துள்ளது. அதையும் மீறி வேட்டையாடுபவர்களுக்கு 12 வருட சிறைத்தண்டனையையும் விதித்துள்ளது.

எனினும், கடந்த மாதம் சற்றும் எதிர்பாராத ஒரு துர்சம்பவம் பிலிப்பைன் நாட்டில் இடம்பெற்றுள்ளது. அதுதான் 'கக்ஸபுவா' (Kagsabua) வின் மறைவு. 'கக்ஸபுவா' எனும் செல்லப்பெயரால் அழைக்கப்படுகின்ற இப் பருந்தானது பிலிப்பைன் நாட்டுக்குரிய பருந்து இனத்தைச் சேர்ந்த, இதுவரை எஞ்சியிருந்த பருந்துகளில் மிகப்பெரிய பருந்தாகும். 2006 ஆம் ஆண்டு காட்டில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான இந்தப் பருந்து, கடந்த இரண்டு வருடங்களாக பிலிப்பைன் பருந்து அமைப்பினால் சிகிச்சை அளிக்கப்பட்டு 'கிடங்க்லேட்' தேசிய பூங்காவில் கூடொன்றில் அடைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்தது. 'கக்ஸபுவா' என்றால் ஒற்றுமை என்று பொருள்.

எவ்வாறாயினும், இப்பருந்து கடந்த சில மாதங்களுக்கு முன், பிலிப்பைன் பருந்து அமைப்பினால் காட்டில் மீண்டும் சுதந்திரமாக விடப்பட்டது. அத்துடன் கக்ஸபுவாவின் செயற்பாடுகளை அவதானிக்கவென அதன் பாதங்களில் வானொலி சமிக்ஞைக் கருவியும் பொருத்தப்பட்டிருந்தது. எனினும், கடந்த மாதம் 8 ஆம் திகதியளவில் இந்த சமிக்ஞைத் தொடர்பு திடீரெனத் துண்டிக்கப்பட்டது. ஆராய்ந்து பார்த்த போது, 'கக்ஸபுவா' அக்காட்டுக்கு வந்த விவசாயி ஒருவரினால் வேட்டையாடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. சமிக்ஞைக் கருவிகள் பொருத்தப்பட்ட அதன் பாதங்கள் வெட்டி வேறாக்கப்பட்டு, சிறகுகள் எரிக்கப்பட்ட நிலையில் காட்டில் கண்டெடுக்கப்பட்டன. சில தினங்களின் பின்னர் கக்ஸபுவாவை வேட்டையாடிய விவசாயி கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஜீநு

### இலையான்களால் பரவும்

## சருும வியாதி குறித்து தொற்று நோய்ப் பிரிவு எச்சரிக்கை!

ஒரு வகை சிறிய இலையான்களால் பரப்பப்படுகின்ற லீஷ்மனைசீஸ் (Leishmaniasis) எனப்படுகின்ற தோல் அரிப்பு நோய் நாட்டின் பல பிரதேசங்களிலும் பரவி வருவதாக கொழும்பு தொற்று நோய்ப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.





இதுவரை இந்நோயானது மாத்தறை, ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் வடமத்திய மாகாணத்தின் சில பிரதேசங்களிலும் பரவி வருவதாகத் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக கொழும்பு தொற்று நோய்ப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் பபா பலிஹவடன தெரிவித்தார்.

'மணல் உண்ணி' எனப்படுகின்ற பூச்சி இனமொன்றினால் பரவுகின்ற இந்நோயானது ஒருவருக்குத் தொற்றிய பின் தோல் மேற்பரப்பில் காயம் ஏற்பட்டு, தோலில் அரிப்பு ஏற்படுவதோடு பின்னர் உடல் முழுவதும் அந்தகாயங்கள் பரவத் தொடங்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

'லீஷ்மனைசீஸ்' எனப்படும் நோய் வீடுகளை அண்டி வாழும் பூனை, நாய் போன்ற விலங்குகளில் 'மணல் உண்ணிகள்' தொற்றிக் கொள்வதனூடாகவும் பரவலாம் என்றும் கூறப்படுகின்றது.

அத்துடன், இந்நோய் தொற்றியவுடன் வைத்தியரை நாடி உடன் சிகிச்சை பெறவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விஜய் Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

தபால் மூல ஆங்கில பாடநெறி ENGLISH Course
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்தவாரே எம்முடன் இணைந்து ஆங்கிலத்தை சரளமாகவும் தெளிவாகவும் கற்றுக் கொள்ள முடியும்
* கிளாஸ் போகும் காலம் நேரம் மிகுதி / வீண் கட்டணங்கள் இல்லை
* குருகிய காலம் என்பதால் 1 மாதத்தில் பாடநெறியை முடிப்பதால் பயன் இல்லை
* அடிப்படையில் இருந்தே கற்றுக்கொடுக்கப்படும்
பாடநெறியில் இணையும் அணைவருக்கும் அழகிய பேக் ஒன்றும் Tigo Sim Card (தொலைபேசி இணைப்பு) ஒன்றும் வழங்கப்படும்
முதல் இணையும் 500 மாணவ/மாணவிகளுக்கு மாத்திரமே Tigo Sim ஒன்று இலவசம்
இந்த Diploma சான்றிதழ் உங்கள் கல்வித்துறை, மற்றும் தொழில் வாய்ப்புக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு துணையாக அமையும்
மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 15/= பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. Tel: 0773 123 523
மாற்று வழிகளிலோ, மறைமுகமான கட்டணங்களோ அறவிடப்படமாட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரில் மூழ்கிய கொத்மலை

**இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நீர் வழங்குவதில் மகாவலி கங்கைக்கு ஒரு தனி இடமுண்டு. மகாவலியின் நீர்த்தேக்கங்களில் கொத்மலை நீர்த்தேக்கமானது மிக முக்கியமானது. மகாவலி நீர்த்தேக்கங்களிலேயே மிகப் பெரியதும், மின் உற்பத்திக்காக மின் நிலையம் அமைக்கப்பட்டுள்ளதும் இதன் முக்கியத்துவத்திற்கு காரணமாகும்.**

மகாவலி கங்கையின் பிரதான கிளை நதியாகிய கொத்மலை ஓயா 43 மைல் தூரம் வரை பாய்கின்றது. இந்நதியில் இணையும் பல்வேறு கிளை நதிகளால் போசிக்கப்படுகின்றது. அக்கிளை நதிகளாவன:-

1. ஹோட்டன் சமவெளியில் ஆரம்பிக்கும் ஆக்ரஓய.
2. தோட்டப்பாலை மலைச்சரிவின் கிழக்குப் பகுதியில் இருந்து உற்பத்தியாகும் தம்பகஸ்தலா ஓய.
3. பேதுறுதாலகாலையின் தெற்குச் சரிவு மற்றும் கிரகரி ஏரியிலிருந்து ஆரம்பிக்கும் நானுஓயா.
4. கிரேட் வெஸ்டன் (Great Western) உடரதல்ல கிகிலியா மான மலைப்பிரதேசத்தில் ஆரம்பிக்கும் பூண்டுலோயா.
5. பேதுறுதாலகாலையின் வடமேற்குச் சரிவில் உற்பத்தியாகும் பன்னல ஓய.
6. ஹரிங்டன் (Harington) கொட்டகலை பிரதேசத்தில் ஆரம்பமாகும் டெவன் நதி.
7. கெப்ரபேன், ஸ்டோனிகிலிப் மலைகளில் இருந்து ஆரம்பமாகும் மவுண்ட்வேனன் நதி.
8. தொம்பகஸ்தலாவ மலைப்பிரதேசத்தில் இருந்து ஆரம்பமாகும் மாக்கந்துறை ஓய என்பனவாகும்.

இவ்வாறு பிரதான 8 கிளை நதிகளால் போசிக்கப்படும் நீரைப் பெறும் 'கொத்மலை' ஓயவானது நீர்த்தேக்கம் அமைப்பதற்கு முன் ஆற்றுப் பள்ளத்தாக்குகள் இரு பெரும் பிரிவுகளாகக் காணப்பட்டன. அவை,

1. பூண்டுலோயாவும்,கொத்மலையும் ஒன்றிணையும் வெவஹேனையிலிருந்து கலிடோனியா வரையிலான மேல் கொத்மலை.
2. வெவஹேனையிலிருந்து உலப்பனை வரையுமுள்ள கீழ்கொத்மலை

இதன்படி மேல்கொத்மலை நீர்த்தேக்கத்திற்கான வேலைகள் ஆரம்பநிலையில் உள்ளன.

ஏற்கனவே, நிர்மாணிக்கப்பட்ட கீழ் கொத்மலைத் திட்டத்துடன் தற்போதைய மேல்கொத்மலை நீர்த்தேக்கம் அமையமுன் இப்பிரதேசம் கலப்பு விவசாயத்திற்கு பெயர் போனதாகவும் பழைமையான பல கிராமங்களைக் கொண்டதாகவும் திகழ்ந்தது. இக்கிராமங்களின் மக்கள் நீர்த்தேக்கத்தின் ஆரம்பத்துடன் அங்கிருந்து அகற்றப்பட்டு காணிகள் வழங்கப்பட்டு வேறு பிரதேசங்களில் குடியேற்றப்பட்டனர்.

## அன்றைய கொத்மலை

அன்று கொத்மலைப் பிரதேசத்தில் ஈரவலயத்திற்குரிய அனைத்துப் பயிர்களும் செழித்து வளர்ந்து நல்ல விளைச்சலைக் கொடுத்தது. கொத்மலைப்பிரதேசத்தின் மேற்பகுதியில் பல்வேறு மரங்களும் கீழ்ப்பிரதேசத்தில் என்றும் பசுமையான வயல் வெளிகளும் காணப்பட்டன. அத்துடன் உருளைக்கிழங்கு, வற்றாளை, மரக்கறிப் பயிர்ச்செய்கைகள் மிகச் சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டன. மேற்பகுதியில் காணப்பட்ட காடுகளினால் வறட்சி இன்றி எமக்கு நீர் தாராளமாகக் கிடைத்தது. அது மட்டுமல்ல, இயற்கை அரணாகவும் இருந்தது.

ஆனால், இன்று இப்பிரதேசத்தில் வாழும் மக்கள் அனைவரும் அனைத்துப் பொருட்களும் கடைகளிலேயே வாங்குகின்றனர். அன்று ஏற்றுமதிப் பொருட்களில் கணிசமான அளவு உற்பத்தி செய்தது கொத்மலை பிரதேசத்திலேயே ஆகும். பாக்கு, மிளகு, ஏலம், கராம்பு என்பன செழிப்பாக விளைந்தன. ஆனால், கொத்மலைத் திட்டம் அமுலாக்கப்பட்ட பின் இப்பயிர்ச்செய்கை அனைத்தும் இல்லாதொழிந்தன. நீர்த்தேக்கத்தை சூழ்ந்த பிரதேசங்கள் இன்று காடாகிவிட்டன. இப்பிரதேசத்தில் காணப்பட்ட பெருந்தோட்டங்களில் வாழ்ந்த மக்களும் அன்று அவர்கள் வாழ்ந்த இடங்களைச் சூழ்ந்த பிரதேசங்களில் மேற்கொண்ட பயிர்ச்செய்கையும் முற்றாக இல்லாதொழிந்தன.

கொத்மலைப் பிரதேசம் பயிர்ச்செய்கைக்கு மாத்திரம் பெயர் போனதல்ல. அங்கு சிறுகைத்தொழில் கிராமங்கள் பல இருந்தன. நவங்கம அத்தகைய கிராமங்களில் ஒன்று. கத்தி, மண்வெட்டி, கோடரி, உள்ளிட்ட பல்வேறு விவசாய, வீட்டுப்பாவனைக்குரிய ஆயுத உற்பத்தி செய்யும் சிறு தொழிற்சாலைகள் இருந்தன. இன்று அக்கிராமங்கள் இல்லை. இத்தகைய தொழில்களில் ஈடுபட்டோர் இன்று வேறு ஊர்களை நாடிச் சென்றுவிட்டனர்.

1979 பெப்ரவரி 04 ஆம் திகதி கொத்மலை நீர்த்தேக்கத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. 86.9 மீற்றர் உயரத்தையும், 600 மீற்றர் நீளத்தையும் கொண்ட இந்நீர்த்தேக்கமானது மின் நிலையம் வரை 22135 அடி நீளமான சுரங்கப்பாதையை கொண்டுள்ளது. 30 அடி விட்டமுள்ள இச்சுரங்கமானது 1 விநாடிக்கு 4000 கன அடி நீரை மின் நிலையத்திற்கு கொண்டு செல்கின்றது.

அட்டபாகே பிரதேசத்தில் நிலத்துக்கடியில் உருவாக்கப்பட்டுள்ள இம் மின்நிலையம் 134 மெகாவொட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக 3 நீர் மின்வலு இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. நீர் மின் வலு உற்பத்தி செய்வதற்கு மேலதிகமாக மீண்டும் மகாவலி கங்கையில் சேரும் நீரானது பொல்கொல்ல, உக்குவலை, போவதென்ன, மொரகாரகந்த முதலிய மின் நிலையங்களின் ஊடாக சென்று அநுராதபுரம், பொலன்னறுவை மாவட்டத்தில் இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட வயல் நிலங்களுக்கு நீர் வழங்குகின்றது. இதனால், இப்பிரதேச விவசாயப் பயிர்ச்செய்கை சிறந்த விளைச்சலைத் தருகின்றது. கொத்மலை நீர்த்தேக்கம் கட்டியதால் இத்தகைய இலாபங்கள் நாட்டுக்கு கிடைத்தாலும் நீர்த்தேக்கத்தால் பெருமளவு மண் கரைந்து நீர்த்தேக்கத்தில் மூடப்பட்ட தும்புத்தொழிற்சாலை, இரும்புத் தொழிற்சாலை, நெசவுத் தொழிற்சாலைகளுக்கு பதிலாக இன்று எவ்வித தொழிற்சாலைகளும் ஆரம்பிக்கப்படவில்லை. கொத்மலைப் பிரதேசத்தின் புவியியல் அமைப்புக்கேற்ப பொருத்தமான அபிவிருத்திகள் ஏற்படவில்லை. அன்று அப்பிரதேசத்தில் காணப்பட்ட சுயநிறைவு பொருளாதார நிலை இன்று நிச்சயமற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. சுருங்கக்கூறின் ஏனையோரை கையேந்தி நிற்கும் நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. இம்மக்களின் பிரதேசம் இன்று தனது இயற்கை காட்சிகள் நிறைந்த இரம்மியமான சூழலை இழந்து நிற்கின்றது.


மின் நிலையத்தின் ஊடாக நீரைக் கொண்டு செல்லும் சுரங்கம்


கொத்மலை அணை


கொத்மலை நீர்த்தேக்கம்


கொத்மலைத் திட்டம் அமைக்கப்படும் முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமிக்குள் நாஸா ஆராய்ச்சி!

நாஸா என்ற பெயரைக் கேட்டவுடன் விண்வெளியும் அதுசார்ந்த விண்வெளி ஓடங்களின் நகர்வுகளும் உங்கள் எண்ணங்களில்





தோன்றும்.ஆனால், 'நாஸா' மண்புழுக்களைப் பற்றியும் ஆராய்ச்சி செய்யத் தொடங்கியிருக்கிறது. விண்வெளித் தொழில்நுட்ப சாத்தியங்களைப் பயன்படுத்தி, மண்ணுக்குள் வாழும் மண்புழுக்கள் மற்றும் மண்ணுக்குள் வாழும் உயிரினங்கள் ஆகியன பற்றி நாஸா ஆராய்ச்சி செய்யத் தொடங்கியுள்ளது. OMEGA என்ற பெயரினால் அழைக்கப்படும் செயற்றிட்டம் மூலமாகவே இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்படவுள்ளது. Observing Microwave Emissions for Geophysical Applications என்பதே OMEGA வின் விரிவான விளக்கமாகும்.

விண்வெளியில் பால்வீதியையும் கிரகங்களையும் ஆராய்ச்சி செய்யும் ஓர் ஆய்வு நிறுவனமான நாஸா, ஏன் பூமிக்குள் காணப்படும் மண்புழுக்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டுமென்ற கேள்வி உங்களுக்குள் எழலாம்.

பூமியின் மேற்பரப்பில் காணப்படும் உயிரிகளின் நிலையில் பூமிக்குள் காணப்படும் உயிரிகளின் வாழ்க்கை முறை ஆதிக்கம் செலுத்துவதாக நாஸா நம்புகிறது. மண்ணின் ஈரலிப்பையும் மண்ணிற்குள் காணப்படும் அங்கிகளின் நடமாட்டத்தையும் அவதானித்து, பூமியின் காலநிலை மாற்றத்தை அறிவதற்கான சாத்தியங்கள் உண்டாகின. ஆனாலும், இந்த ஆராய்ச்சி பூமிக்குள் உயிரிகளின் நடமாட்டத்தை மட்டும் அறிவதற்காக மட்டுப்படுத்தப்படவில்லை எனவும் நாஸாவின் செயற்றிட்டப் பொறுப்பாளர் தெரிவிக்கின்றார்.

இந்த ஆய்வின் மூலம் நிகழப் போகும் வெள்ளம், மண்சரிவு மற்றும் வறட்சி போன்ற அனர்த்தங்களை எதிர்வு கூறுவதற்கான சாத்தியங்கள் தோன்றுமென அவர் நம்பிக்கை வெளியிடுகின்றார். அது மட்டுமல்லாது, OMEGA ஆராய்ச்சியின் மூலம் பெறப்படும் தகவல்கள் விவசாயிகள் தமது பயிர்ச்செய்கையைத் திட்டமிட்டுக் கொள்ளவும் நீர்ப்பாசன வசதிகளை மேற்கொள்வதில் தீர்மானங்களை மேற்கொள்ளவும் அறுவடையின் அளவை எதிர்வு கூறவும் உதவக்கூடியதாக இருக்கும்.

இந்த ஆராய்ச்சிக்காகப் பயன்படுத்தப்படும் சாதனங்கள் விசேடித்த முறையில் தயார் செய்யப்பட்டதோடு, அவை மிக இயல்பான வகையில் செயற்பட்டு துல்லியமான தகவல்களை வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. அத்தோடு, இந்தத் தகவல்கள் மூலம் கணிக்கப்படும் எதிர்வு கூறல்கள் மிகச் சரியானதாக அமையுமெனவும் நம்பிக்கை வெளியிடப்படுகிறது.




## ஒகஸ்ட் 16 குறைச்சந்திர கிரகணம்:

கடந்த 16 ஆம் திகதி சனிக்கிழமை, உலகின் பல பாகங்களில் உள்ள மக்களால் குறைச்சந்திர கிரகணமொன்றை அவதானிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. இக் குறைச்சந்திர கிரகணம் ஆனது, ஆபிரிக்கா, கிழக்கு ஐரோப்பா, மத்திய மற்றும் மேற்கு ஆசியா, இந்தியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் வசிக்கும் மக்களால் தமது வெற்றுக்கண்களால் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இலங்கையிலும் இந்நிகழ்வை அவதானிக்க முடிந்தது குறிப்பிடத்தக்கது.

சனிக்கிழமை இரவு 11.53 மணிக்கு ஆரம்பித்த சந்திர கிரகணம், மறுநாள் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.15 மணிவரை நீடித்திருந்ததாக நவீன தொழில்நுட்பங்களுக்கான




ஆத்தர் சி.க்ளார்க் நிறுவனத்தின் வானியல் ஆலோசகர் கலாநிதி சந்தன ஜயரத்ன தெரிவித்தார். இந்தச் சந்திர கிரகணத்தை வெற்றுக்கண்ணால் 17 ஆம் திகதி அதிகாலை 1.06 மணி தொடக்கம் அதிகாலை 4.15 மணிவரை கண்டுகொள்ள முடிந்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த 16 ஆம் திகதி சந்திர கிரகணத்தை சிறப்பாக அவதானிப்பதற்கு ஏற்ற காலநிலை அமைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. சந்திர கிரகணமானது, சூரியன், பூமி, சந்திரன் ஆகியன ஒரே நேர்கோட்டில் காணப்படும் போது தோன்றும். சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையே பூமி காணப்படும்போது, சூரியனிலிருந்து வரும் ஒளி பூமியின் மூலம் மறைக்கப்படுவதால், சந்திரனில் பூமியின் நிழல் தோன்றும். இதுவே சந்திர கிரகணம் எனக் கூறப்படுகிறது.

### பால் வீதி

எமது பூமி அமைந்திருக்கும் உடுத்தொகுதியானது சுருளி உருவமானதாகும். பில்லியன் கணக்கான நட்சத்திரங்களால் உருவான இந்த அமைப்பு Milky way அதாவது 'பால் வீதி' என்ற பெயரினால் அழைக்கப்படுகிறது. பூமி,



அமைந்து கொண்டதோடு, அதன் ஏனைய பகுதிகளின் மூலம் கோள்கள் உருவாக்கம் பெற்றதாகக் கூறப்படுகிறது.

சூரியனை அண்மித்த வகையில் காணப்படும் இவ்வகைத் தூசுகளின் கூட்டம் கடினமடைந்து, வெப்பநிலை கூடிய கிரகங்களாகத்

## சூரிய குடும்பம் பற்றி அறிந்து கொள்வோம்

சூரியன், நட்சத்திரங்கள் மற்றும் ஏனைய கிரகங்கள் என அனைத்துமே இந்தப் பால் வீதியில் காணப்படுகின்றன.

எமது பால் வீதிக்கு அண்மித்த வகையில் 'அன்ரோமைடா'(Andromeida) என்ற பால் வீதி காணப்படுகின்றது. Andromeida ஆனது, எமது பால்வீதியின் ஒரு பகுதியென்றே முதலில் அறிந்து கொள்ளப்பட்டிருந்தாலும் 1920 ஆம் ஆண்டு அமெரிக்க வானியல் விஞ்ஞானியான Edwin Powell Hubble என்பவரால் அது இன்னொரு பால் வீதி என்ற உண்மை நிரூபிக்கப்பட்டது. இந்தப் பால் வீதியிலும் பில்லியன் கணக்கான நட்சத்திரங்களும் கிரகங்களும் காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

### அண்டவெளியின் தோற்றம்

சூரியன் மற்றும் அதனை சுற்றிக் கொண்டிருக்கும் அனைத்துக் கோள்களும் ஒரே வாயு மற்றும் தூசு துணிக்கைகளால் ஆக்கப் பெற்றிருக்கின்றன. இந்த வாயு, தூசு, மேகங்கள் மெல்ல மெல்ல அசைந்து சென்று சூரியனாக தோன்றியதோடு, சூரியனுக்கு வெளியே வெகு தூரத்தில் காணப்படும் கோள்கள் குளிர்ச்சியான காலநிலையையும் பெற்றுக்கொண்டன. அதே வேளை, பனி மற்றும் வாயு ஆகியன தூரத்தில் காணப்பட்ட தூசு துணிக்கைகளால் ஆன மேகங்களுடன் இணைந்து வியாழன் மற்றும்யுரேனஸ் போன்ற கோள்கள்தோன்ற வழியமைத்தன எனலாம்.

60 நாட்களில் தபால் மூல ஆங்கில பாடநெறி
இதோ மீண்டும் இலவச டீசேட் ஒன்றை பெறும் வாய்ப்பு
இலகுவாக ஆங்கிலம் கற்றுக் கொள்ள விரும்பும் அனைவருக்கும் சிறந்த வழிகாட்டி
English Language யின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.
BASIC/SPOKEN ENGLISH & DIPLOMA IN ENGLISH
அடிப்படையில் இருந்த தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது.


60 நாட்களின் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் ஒன்றும்
FREE FREE இலவசம் இலவசம்
பாடநெறியில் இணையும் அனைவருக்கும்
* இலவச 30 days Easy Way English Book Part1
* இலவச அழகிய டீசேட் ஒன்று

இலங்கையின் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்
பாடநெறியில் இணைய வயது கட்டுப்பாடோ, ஆங்கில முன் அறிவோ தேவையில்லை. பாடசாலை மாணவர்கள், தொழில் புரிவோர், தொழில் வாய்ப்பு எதிர்பார்க்கும், இல்லத்தரிசிகள் என யாவருக்கும் இணைய முடியும்.
மேலதிக விபரங்களுக்கு 10/- பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.
THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-5615561, 0777-220002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சோலையாக மாறியுள்

பாலைவனம் என்றவுடன் நம் எண்ணத்தில் வருவது நீர் இல்லாத வெறும்மணல் பரப்பான பிரதேச மாகும். போதியளவு மரம், செடி, கொடிகள் இல்லாத பகுதியே 'பாலைநிலம்' என்றழைக்கப்படு கின்றது.

## பாலைவனம் இரண்டு வகை

**1. உஷ்ணமான பாலைவனம்**

மரம், செடி, கொடிகள் வளர் வதற்கு போதியளவு ஈரப்பதன் நிலத்தில் இல்லாதபோது உஷ்ண மான பாலைவனம் உருவாகின்றது. மழைவீழ்ச்சி இல்லாதபோது அதி உயர் வெப்பம் காரணமாக வளியி லும் தரையிலும் வறட்சியான நிலை காணப்படுகின்றது. இவ் வகைப் பிரதேசங்கள் உஷ்ணமான பாலைவனங்களாகும்.

**2. குளிர் பாலைவனம்**

மிகவும் குறைந்த வெப்பநிலை நிலவும்போது நீர் வற்றிப் போகின் றது. அப்போது மரம், செடி, கொடி கள் வளர்வதற்கு போதியளவு உஷ்ணம் இல்லாதபோது வெறும் மணல் பரப்பாக காட்சி தரும். அத் தகைய பிரதேசங்களில் அடிக்கடி மணற்புயல் வீசும். அதில் கடும் குளிர்ச்சி நிலை காணப்படும். இவ் வகைப் பாலைவனங்கள் குளிர்ப் பிரதேச பாலைவனங்களாகும்.

## சஹாரா பாலைவனம்

வெப்பநிலை உயர்வான பாலை வனங்களில் 'சஹாராப்' பாலைவனம் பிரதான இடம் வகிக் கின்றது. 'சஹாரா' என்ற அரபிச் சொல்லின் பொருள் 'அதிவிசால மான பாலைவனம்' என்பதாகும். இந்த சஹாரா பாலைவனம் வட ஆபிரிக்கா வின் பெருமளவான நிலப்பரப்பை ஆக்கிரமித்திருக்கின்றது.

## சஹாரா பாலைவன உ

### சஹாராவின் சிறுத்தை (சீடா)

சஹாராப் பாலைவனத்தில் காணப்படும் 'சீடா' என்ற இன சிறுத்தையானது பிரமாண்டமான பூனை இனக்குடும்பத்தைச் சேர்ந்த தாகும். இந்த சிறுத்தை மணித்தியா லத்திற்கு 70-75 கிலோமீற்றர் வேகத்தில் ஓடக்கூடியதாகும்.



மிகவும் அமைதியான முறையில் பதுங்கி வேட்டையாடி தனக்குரிய இரையைத் தேடிக்கொள்ளவும் மரங்களில் ஏறவும் ஆற்றல் பெற்ற இந்த வகை சிறுத்தைகள் தற்போது சஹாராப் பாலைவனப் பிரதேசத் தில் மிகவும் குறைவாகவே உள்ளன.



### பெனெக் நரி

வட ஆபிரிக்கா, சஹாரா, அரபு நாடுகளின் சில பகுதிகளிலும் இவ் வகை 'பெனெக்' நரிகள் வாழ்கின் றன. சிறிய உருவம் உடைய இவற் றின் காதுகள் பெரிதாக கூர்முனை வடிவம் கொண்டவையாகவும் பகல் நேரங்களில் கடும் உஷ்ணத்தில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள் ளவும் உடலில் இருந்து வெளியேறும் உஷ்ணத்தை வெளிப்படுத்தவும் உதவியாக அமைந்துள்ளன. குளிர் கடுமையாக உள்ள இரவு நேரத்தில் உடல் உஷ்ணத்தை சமநிலையில் பேண இதன் தடிப்பான தோல் உதவியாக அமைகின்றது.

### லெய்ரஸ் கிவின்கெஸ்ட் தேள்

இந்த தேள் இனம் ஒம்பர்மன் மற்றும் இஸ்ரேல் 'பாலைவனத் தேள்' என்றழைக்கப்படுகின்றது. அங்கில டொக்சின், சய்ல டொக்சின் என்ற விஷம் இந்த தேள் கொட்டினால் வெளிப்படுகின்றது. இவை இரவு நேரங்களிலேயே வெளியில் செல்கின்றன.






### ஹைரெக்ஸ் எலி

இவை தாவர உண்ணி வகை எலிகளாகும். இதன் நீளம் 30-70 சென்ரிமீற்றர் வரையிலாகும்.


### மணல் விரியன் பாம்பு

நன்றாக வளர்ச்சியடைந்த மணல் விரியன் பாம்பு ஒன்றின் நீளம் 50 சென்ரிமீற்றர் வரையிலாகும். இவை மணலுக்கடியில் ஒளிந்திருந்து இரையைக் கண்டவுடன் பாய்ந்து தாக்கும் ஆற்றல் கொண்டவை.




மணலுக்கடியில் பதுங்கி இருக்கும்போது வெளியில் தெரிவது இதன் இரு கண்கள் மட்டுமே. கண்களுக்கு மேலாக இரண்டு கொம்புகள் உள்ளன.

### டொமெடரி ஒட்டகமும் ஆடுகளும்



பாலைவனப் பிரதேசங்களில் வாழும் உயிரின வகைகளில் 'டொமெடரி' ஒட்டகமும் 'டொமெடரி' ஆடுகளும் முக்கியமானவை. சஹாராப் பாலைவனப் பிரதேச மக்கள் இவற்றை பெரிதும் விரும்பி வளர்க்கின்றனர். வட ஆபிரிக்கா, ஆசியா ஆகிய பிரதேசங்களுக்குரிய இவையிரண்டும் அரேபிய ஆடுகள் என்றும் அரேபிய ஒட்டகம் என்றும் அழைக்கப்படுகின்றன.





## சஹாரா கொண்டுள்ள நிலப்பரப்புக்கள்

அல்ஜீரியா, சார்ட் இராச்சியம், எகிப்து, லிபியா, மாலீ, மொரோக்கோ, மொரிட்டானியா, நய்ஜர், சூடான், டியுனிறியா போன்ற பகுதிகளை எல்லைகளாகக் கொண்டிருக்கின்றது. அத்தோடு வண்டல் மணல் குவியல், கரடுமுரடான மண்மேடுகள் உட்பட இன்னும் பல பகுதிகளும் எல்லை களாக அமைந்துள்ளன.

## பாலைவனத்தில் மலைகள்

பாலைவனத்தில் மலைக் குன்றுகளும் மலைத் தொடர்களும் உள் ளன. இவை மண்குவி யல்களைக்கொண்டே உருவாகியுள்ளன. சஹாராப் பாலை வனத்தில் மிக உயர்ந்த மலையாக சாட் தேசத்தில் அமைந்துள்ள 'எமிகுசி' என்ற மலை அமைந்திருக்கின்றது. இதன் உயரம் 3415 மீற்றராகும். அத்தோடு அரிதாகக் கிடைக்கும் மழை வீழ்ச்சி காரணமாக உயிரியல் பன்முகத் தன்மையும் நிகழ்கின்றது.

## அருவிகள்

சஹாராப் பாலைவனத்தை ஊடறுத்து ஆறுகள் சில பாய்ந்தோடுகின்றன. ஆயினும், சில ஆறுகள் விரைவில் வற் றிப்போய் விடுகின்றன. ஓர் ஆறு மட் டும் வற்றாத நதியாக ஓடிக்கொண்டிருக் கின்றது. அந்த நதியே 'நைல்' நதியா கும். ஆபிரிக்காவில் இருந்து ஆரம்ப மாகி மத்திய தரைக்கடலில் சங்கமிக்கும் 'நைல் நதி' ஊடறுத்துப் பாயும் எல்லை களில் சஹாராவும் ஒரு பிரதேசமாகும்.

சஹாராவில் காணப்படும் நிலக்கீழ் நீர் காரணமாக பஹாரியா, கார்டியா, திம் மோன், குப்ராப், சிவா ஆகிய பகுதி களில் சதுப்புத்தன்மையை அவதா னிக்க முடியும். இப்பகுதிகளில் பசுமை யான மேய்ச்சல் நிலங்களை காணலாம்.


அத்தோடு இந்தப் பாலைவனம் வெறும் வறண்ட பிரதேசம் அல்ல. இங்கு தாவ ரங்களும் பற்றைக் காடுகளும் செழித்து வளர்கின்றன. கி.மு 3000 வருடங் களுக்கு முன்பிருந்த சஹாராவின்நிலை இன்றுள்ள நிலையை விட முற்றிலும் மாறுபட்டதாகும். ஈரப்பதன் உள்ள பிர தேசத்தில் 30,000 வகையான உயிரி னங்கள் வாழ்ந்துள்ளதற்கான சான்றுகள் உள்ளன. நதிக்கரையை அண்டிய பகுதி களில் வாழ்ந்த உயிரினமான முதலை கள் இன்றும் அப்பிரதேசங்களில் உள் ளன. எகிப்தியர்கள், மொரிடானியர்கள், மொரொக்கோ வாசிகள், அல்ஜீரியர்கள் ஆகியோர் இந்த சஹாராப் பாலைவன பிரதேசங்களில் மானிட வாழ்க்கைக்கு உகந்த செழிப்பான பகுதிகளில் குடி யேற்றங்களை அமைத்து வாழ்க்கை நடத்துகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ா சஹாரா பாலைநிலம்

### முக்கிய நதி


எகிப்தின் தலைநகர் கெய்ரோ- சஹாராப் பாலைவனத்திற்குரிய பிரதான நகரமாகும். இந்த கெய்ரோ நகரம் 'நைல்' நதிக்கரையில் அமைந்திருக்கின்றது. மொரித்தானியாவின் தலைநகர் சுவாகோட், டமன்ரசட், உவர்க்லா பெசார், ஹெசீ, மெஸ்ரூத், கார்தாயா, எல்ஓக்ட், அல்ஜீரியாவின் டிம்புக்கு, மாலிஹி, அகாரடஸ், நய்கர், ஹிகாட் லிபியாவின் பயா மற்றும் சாட் ஆகிய நகரங்கள் சஹாராப் பிரதேசத்தில் உள்ள ஏனைய நகரங்களாகும்.



## யிரினங்கள்

### லானர் பறவை

'பிலென்ங்' குருவி என்றழைக்கப் படுகின்ற 'லானர்' பறவையும் இந்த சஹாராப் பாலைவனப் பிரதேசத்தில் காணப்படக்கூடியவை. இவை



ஏனைய சிறிய உயிரினங்களை வேட்டையாடி உயிர் வாழ்கின்றன. தாழப் பறந்து வந்து குருவிகள் மற்றும் சிறிய உயிரினங்களையும் பிடித்து உணவாகக் கொள்கின்றன.

### கபரகொயா / ஓணான் உடும்பு



அரபு மொழியில் 'வரால்' என்றழைக்கப் படும் கபரகொயா அல்லது உடும்பு போன்ற இந்த ஓணான் வகையும் சஹாராப் பாலைவனப் பிரதேசத்தில் உள்ள உயிரினமாகும். பகல் நேரத்தில் நிழலான இடங்களிலும் பற்றைக்குள்ளும் மறைந்து வாழும் இவை உணவு தேடுவது இரவிலாகும்.

சிறிய பூச்சிகள், புழுக்கள், வெட்டுக்கிளி போன்றனவும் மாமிச வகையும் இதன் உணவாகும்.



### பெஸ்பரா

பறக்க முடியாத பெரிய பறவை இனம் பெஸ்பராவாகும். ஆரம்ப காலத்தில் சஹாராப் பாலைவனத்தில் பெஸ்பராக்கள் பெருமளவில் வாழ்ந்துள்ளன. ஆனால், இப்போது பல்வேறு காரணங்களால் அவை அருகிப் போய்விட்டன.

### இன்றைய சஹாரா

உலகின் எரிபொருள் தேவையை நிறைவு செய்யும் பிரதான எரிபொருள் வளம் அமைந்திருப்பது சஹாராப் பாலைவனப் பிரதேசத்தில் அரேபிய பாலைவனப் பகுதிகளிலுமாகும்.

இந்த பாலைவனப் பிரதேசங்களில் மக்களின் வாழ்க்கை முன்னேற்றகரமான நிலையில் இருந்து வருகின்றது. மேலும் இப்பகுதிகளில் நிலக்கீழ் வளங்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளும் தொடர்கின்றன.

மத்திய சஹாராவில் 'குருக்பெயா' என்ற கோத்திரத்தவர்கள் வாழ்கின்றனர். மேற்கு சூடானின் டபுர் பகுதியில் வாழும் மக்கள் 'திலோ' என்ற மொழியைப் பேசுகின்றனர். பெஜா, கனுரி, டெடாகா, ஒஸாகா ஆகிய மொழிகளும் இப்பாலைவனப் பிரதேச மொழிகளாகும்.





### பண்டைய மக்கள்

கி.மு 6000 ஆம் ஆண்டளவில் எகிப்தியர்கள் எகிப்தின் வட மேற்காக குடியிருப்புக்களை அமைத்து வாழ்ந்து வந்தனர். அவர்களின் பிரதான தொழில் கால்நடை வளர்ப்பாக இருந்தது. ஆபரணங்கள் செய்தல், மிருகங்களின் தோலால் ஆடை தயாரித்தல், பட்டு வளர்ப்பு என்பனவும் இவர்களின் முக்கிய தொழில்களாகும்.

#### நுபியர்கள்

கி.மு 5000 ஆம் ஆண்டளவில் 'நுபியர்கள்' என்ற மானிட வர்க்கத்தினர் இப்பிரதேசங்களில் வாழ்ந்துள்ளனர். அவர்கள் வாழ்ந்த பிரதேசம் இன்றும் கூட 'நுபியர்' என்றழைக்கப்படுவதோடு அப்பகுதி மிகவும் செழிப்பான நிலப்பரப்பாகவும் இருக்கின்றது. பொருளாதாரத்திற்காக கால்நடை வளர்ப்பு விவசாயம் ஆகிய தொழில்களில் இவர்கள் ஈடுபட்டிருந்தனர்.

அதனால், இந்த மக்களை விவசாயப் புரட்சிக்கு வித்திட்டவர்கள் என்று வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். அத்தோடு நட்சத்திர சாஸ்திரம் (வானியல்) ஆகிய அறிவுத்துறையில் இவர்கள் விற்பன்னர்களாகவும் இருந்தனர். சூடான் பிரதேசத்தில் உள்ள 'சஹாரா குகை ஓவியங்கள்' இவர்கள் தீட்டியவைகளாகும்.

#### பினிசியர்கள்

சஹாராப் பாலைவனத்திற்குட்பட்ட 'பினிசியா' என்ற பிரதேசத்தில் வாழ்ந்தவர்கள் பினிசியர்கள் என்றழைக்கப்படுகின்றனர். இவர்கள் கி.மு 1200-800 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வாழ்ந்தனர். 'சஹாராப்' பாலைவனப் பிரதேசத்தில் இருந்து மத்திய தரைக்கடல் வரை இந்த நாகரிகம் பரவியிருந்தது.


#### கிரேக்கர்கள்

கி.மு 500 ஆம் ஆண்டளவில் கிழக்கு சஹாராப் பிரதேசத்திற்கு வியாபாரத்திற்காக கிரேக்கர்கள் வந்து போயுள்ளனர். செங்கடல் கரையோரமாக இவர்கள் குடியேற்றங்களை அமைத்து தமது வாழ்க்கையை நடத்தியுள்ளனர்.

அமீர் ஹூசைன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞான முன்னேற்றத்தினால் மீண்டும் உலகுக்கு வரவுள்ள தஸ்மேனிய நரிப்புலி



உலகிலிருந்து மறைந்த 'டைனோசர்' விலங்கின மீள் உருவாக்கம் பற்றிய திரைப்படம் ஒன்றை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதுதான், 'ஜுராசிக் பார்க்' திரைப்படம். ஆனால், இங்கு நாம் குறிப்பிடப் போவது திரைப்படம் பற்றியதல்ல. இது உண்மையில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வு பற்றியதாகும். உலகில் இருந்து அழிந்து போன விலங்கினமான தஸ்மேனிய நரிப்புலியின் உயிரணுக்களைப் பிரித்தெடுத்து அவற்றை மீண்டும் உயிர்ப்பிக்க முடியும் என்று கூறும் விஞ்ஞானிகள் சிலர் அண்மையில் அதனை நிரூபித்தும் காட்டியுள்ளனர் என்பதே அந்த வியப்பூட்டும் செய்தியாகும்.

## விஞ்ஞானிகளின் திறமை

இச்சம்பவம் அவுஸ்திரேலியாவில் நிகழ்ந்துள்ளது. அந்நாட்டின் 'மெல்பேர்ன்' பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த விஞ்ஞானிகள் குழுவொன்று இணைந்து உலகிலிருந்து அழிந்து போன கொடூர 'டைனோசரை' உயிர்ப்பிக்க முயற்சிக்கவில்லை. மாறாக, அண்மைக்காலத்தில் அழிவை எதிர்நோக்கிய விந்தையான விலங்கினம் ஒன்றை உயிர்ப்பிக்கவே அவர்கள் முயற்சிக்கின்றனர்.

அவுஸ்திரேலியாவின் தாழ்நிலப் பிரதேசத் தீவான தஸ்மேனியாவுக்கே தனித்துவம் மிக்க விலங்கினம் ஒன்றுள்ளது. அதனை 'நரிப்புலி' (Tasmanian tiger fox/Tasmanian tiger) என்று கூறுகின்றனர்.

நாயைப் போன்ற தோற்றத்தைக் கொண்ட இந்த விலங்கு விசித்திரமானதாகும். இவற்றுக்கு குட்டிகளை ஈன்றெடுப்பதற்கெனவே வயிற்றில் பை போன்ற அமைப்பொன்று உள்ளது. இது கங்காரு இனத்தைச் சேர்ந்ததாகும். இதற்கு புலிய்யப் போன்று முதுகில் வரிகள் உள்ளன. இவற்றின் விஞ்ஞானப் பெயர் 'தைலசைன்' (Thylacine) என்பதாகும்.

## தஸ்மேனிய நரிப்புலிகளின் மறைவும் மீள் உருவாக்கமும்

இந்த விலங்குகள் வேட்டையாடப்பட்டதன் காரணமாக முழுமையான அழிவுக்குட்பட்டன. 1900 ஆம் ஆண்டுகளில் இந்த விலங்குகள் முற்றிலுமாக உலகில் இருந்து அழிந்து போயின. 'ஹோபர்ட்' விலங்கியல் பூங்காவில் வாழ்ந்து வந்த இறுதி தஸ்மேனிய நரிப்புலியும் 1936 ஆம் ஆண்டு மரணமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அனைவரையும் வியப்பில் ஆழ்த்திய இந்த அபூர்வ விலங்கினத்தின் உயிரணுக்களை விஞ்ஞானிகள் மதுசாரத்தில் பாதுகாத்து வைத்திருந்தனர். அவ்வாறு பாதுகாக்கப்பட்ட உயிரணுக்கள்தான் இன்று தஸ்மேனிய நரிப்புலிகளின் மீள் உயிர்ப்பித்தலுக்குத் துணை புரிந்துள்ளன.

மறைந்து போன இந்த விலங்கின் உயிரணுவினை உயிர் வாழும் விலங்கில் செலுத்தி அதனை வளரச் செய்ய நடவடிக்கை எடுத்த முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.அதன்படி, எலியின் கருவுக்குள் உட்செலுத்தப்பட்ட இந்த உயிரணு எலியின் கருப்பைக்குள் வளர ஆரம்பிக்கும். விஞ்ஞானிகள் மேற்கொண்டுள்ள இந்த முயற்சியானது, எதிர்கால உயிரியல் விஞ்ஞான ஆய்வுகளின் முன்னேற்றத்திற்கு பெரும் உதவி புரியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதேபோன்று, அழிந்து போயுள்ள பிற விலங்குகளின் உயிர்ச் செயற்பாடுகளை அறிந்து கொள்ளவும் இந்த நடவடிக்கை உதவும் எனக் கருதப்படுவதோடு இது 'குளோனிங்' செயற்பாட்டின் மற்றுமொரு திருப்புமுனை என்றும் கூறப்படுகின்றது.



எலியின் கருப்பைக்குள் வளர்ந்து வரும் நரிப்புலியின் கரு



'ஹோபர்ட்' விலங்கியல் பூங்காவில் வாழ்ந்து வந்த இறுதி தஸ்மேனிய நரிப்புலி (1936)

-பிரியதர்ஷினி


விஜய்

# கடற்கரைக் காட்சி - அகில இலங்கை சித்திரப் போட்டி - 2008

அன்பு பிள்ளைகளே,

கடந்த வருடங்களைப் போலவே இம்முறையும் 'கடற்கரைக் காட்சி' எனும் தலைப்பிலான சித்திரப் போட்டியை அகில இலங்கை ரீதியில் நடாத்துவதற்கு உத்தேசித்துள்ளோம். கடல் ஆமைகள் பாதுகாப்புத் திட்டம் இப்போட்டியை நடத்துகின்றது.

கடற்கரையோரக் காட்சியொன்றை நீங்கள் நேரில் தரிசித்து கண்ட காட்சியாக சித்திரமொன்றை வரைந்து அனுப்பவேண்டும். முட்டையிடுவதற்காக கடற்கரைக்கு வருகின்ற கடல் ஆமைகள், ஆழமற்ற கடற் பகுதிகளில் முருகைக்கற்கள் காணப்படுதல் ஆகியன உள்ளடங்கிய கடற்கரையோர சுவாத்தியத்தை வெளிப்படுத்தும் எந்தவொரு காட்சியையும் சித்திரமாக வரைந்து அனுப்பலாம்.

## போட்டி விதிமுறைகள்

- ★ ஒருவர் ஒரு சித்திரத்தை மாத்திரமே அனுப்ப முடியும்.
- ★ சித்திரத்தின் அளவு 35 செ.மீற்றர்X45 செ.மீற்றர் அளவில் இருத்தல் வேண்டும்.
- ★ எந்தவொரு வர்ணப் பூச்சையும் பயன்படுத்தலாம்.
- ★ ஏற்றுக் கொள்ளப்பட்ட நடுவர் குழுவொன்றினால் பரிசுக்குரிய சித்திரங்கள் தெரிவு செய்யப்படுவதுடன், நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானதாகவும் அமையும்.
- ★ சித்திரம் வரையப்படும் தாளின் பின்புறத்தில் போட்டியாளரின் பெயர், வீட்டு முகவரி, பிறந்த தினம், பாடசாலை, பாடசாலை முகவரி, போட்டிப் பிரிவு ஆகியனவும் குறிப்பிடப்படல் வேண்டும்.
- ★ போட்டிக்கு அனுப்பப்படும் சித்திரங்கள் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பி ஒப்படைக்கப்பட மாட்டாது.
- ★ போட்டி முடிவுகள் 'விஜய்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

## சித்திரங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:

'கடற்கரைக் காட்சி' அகில இலங்கை சித்திரப் போட்டி - 2008
கடல் ஆமைகள் பாதுகாப்புத் திட்டம்,
இல-11, பெரேரா மாவத்தை,
மடகும்புர, பாணந்துறை.

## போட்டி முடிவு திகதி: 2008/செப்டெம்பர்-15 ஆம் திகதி

மேலதிக விபரங்களுக்கு 077-9317619 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும். வெற்றியீட்டப்படும் சித்திரங்களின் உரிமை கடல் ஆமைகள் பாதுகாப்புத் திட்டத்திற்கு உரித்துடையதே.

### பரிசளிப்பு விழா

பரிசளிப்பு விழா ஒக்டோபர் மாதத்தில் குறிப்பிட்ட ஒரு தினத்தில் கொழும்பில் நடைபெறும்.

### பங்குபற்றக்கூடியோர்

பாலர் வகுப்பு மாணவர்கள்.
ஆரம்பப் பிரிவு 6 ஆம் ஆண்டிற்கு கீழுள்ள மாணவர்கள்.
கனிஷ்ட பிரிவு - 7, 8, 9, 10 ஆம் ஆண்டு மாணவர்கள்.
சிரேஷ்ட பிரிவு - 11, 12, 13 ஆம் ஆண்டு பிரிவு மாணவர்கள்.

### பரிசு விபரம்

அகில இலங்கை ரீதியில் தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கு பணப்பரிசு வழங்கப்படும்.

| பாலர் பிரிவு | பரிசு |
|---|---|
| 1 ஆம் இடம் | ரூபா 3,000.00 |
| 2 ஆம் இடம் | ரூபா 2,500.00 |
| 3 ஆம் இடம் | ரூபா 2,000.00 |

| ஆரம்பப் பிரிவு | பரிசு |
|---|---|
| 1 ஆம் இடம் | ரூபா 5,000.00 |
| 2 ஆம் இடம் | ரூபா 3,000.00 |
| 3 ஆம் இடம் | ரூபா 2,000.00 |


| கனிஷ்ட பிரிவு | பரிசு |
|---|---|
| 1 ஆம் இடம் | ரூபா 7,000.00 |
| 2 ஆம் இடம் | ரூபா 5,000.00 |
| 3 ஆம் இடம் | ரூபா 3,000.00 |

| சிரேஷ்ட பிரிவு | பரிசு |
|---|---|
| 1 ஆம் இடம் | ரூபா 10,000.00 |
| 2 ஆம் இடம் | ரூபா 7,000.00 |
| 3 ஆம் இடம் | ரூபா 5,000.00 |

சான்றிதழ்: ஒவ்வொரு பிரிவிலிருந்தும் தெரிவு செய்யப்படும் சிறந்த சித்திரங்களை வரைந்த நூறு பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

Columbus ZOO and Aquarium


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மய்சோனிய மாளிகை

# இரண்டு நாகரிகங்களின் இணைவு

உலகில் கிரேக்க நாகரிகம் பபிலோனிய நாகரிகம், யூப்ரடிஸ், தைகிரிஸ் நாகரிகங்கள், நைல் நதிக்கரை நாகரிகம், இந்து நதிக்கரை நாகரிகம் என்றெல்லாம் பல வகையான நாகரிகங்கள் பற்றி பேசப்படுகின்றன. மானிட வாழ்வின் ஆரம்பத்தையும் முறையான வளர்ச்சியையும் இந்த நாகரிகங்கள் பற்றி அறிவதன் மூலம் நாம் புரிந்துகொள்ளலாம்.

கிரேக்க நாகரிகம் என்றவுடன் அதற்குத் தனியான ஓர் இடம் உண்டு. 'எஜின்' என்றழைக்கப்பட்ட இந்த நாகரிகம் கி.மு 2800 ஆம் ஆண்டளவில் கிரீட் தீவில் ஆரம்பமாகியதாகும்.


மட்பாண்டங்கள்

மினோவன் மற்றும் மய்சோனியன் என்ற இரண்டு பண்டைய நாகரிகங்களின் இணைவாக கிரேக்க நாகரிகம் உருவாகியது. இதில் 'மினோவன்' என்பது மத்திய தரைக்கடலின் கிரிட் தீவில் இருந்து உருவாகியதாக கருதப்படுகின்றது. அத்தீவின் தலைநகராக இருந்தது நொசஸ் நகரமாகும். மினோஸ் (Minos) என்ற அரசரே இதன் ஸ்தாபகர் என கருதப்படுகின்றார்.

மினோவன் வாசிகள் மர வேலைத் தொழிலில் தேர்ச்சி பெற்றவர்களாவர். அவர்கள் பெருமளவான கப்பல்களைக் கட்டியுள்ளனர். மட்பாண்டப் பொருட்கள், உலோகப் பொருட்கள், ஆபரணங்கள் போன்றவை இவர்களின் கைவண்ணத்தில் உருவாகியவை. அவர்கள் இப்பொருட்களை தம் கப்பல்கள் மூலம் பிற நாடுகளுக்கு ஏற்றிச் சென்று வியாபாரம் செய்தனர். இதுவே உலகின் சர்வதேச வாணிபத்தின் ஆரம்பமாக அமைந்தது.


மாடுகளை கடவுளாக மதித்ததன் அடையாளம்

மிருக வளர்ப்பு (பண்ணை) மீன் பிடித்தல், வேட்டையாடுதல் என்பன இவர்களின் ஏனைய ஜீவனோபாயத் தொழில்களாயின. மல்யுத்தம், காளை அடக்குதல், குத்துச்சண்டை போன்ற வீரவிளையாட்டுக்களில் நல்ல திறமைகளைக் காட்டியதுடன் அவற்றில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர். காளை மாடுகளை இவர்கள் கடவுளாக மதித்தனர். இத்துடன், இந்த மினோவன் நாகரிக மக்கள் பெருத்த உயரமான உடல் அமைப்பைக் கொண்டிருக்கவில்லை. ஓரளவு பருமனான உயரமுடைய உடல் அமைப்பையே கொண்டிருந்தனர். பார்லி, சோளம், திராட்சை, ஒலிவ் ஆகியவற்றை பயிரிடுவதிலும் கூடுதல் கவனம் செலுத்தினர்.

ஐரோப்பாவின் பண்டைய முறையில் கற்கல் பதிக்கப்பட்ட பாதைகளை இவர்கள் வாழ்ந்த நொசஸ் நகரத்தில் முதன்முதல் காண முடிந்தது. அந்த முறையில் பாதைகளை அமைக்கும் கலை அங்கிருந்தே பிற்காலத்தில் உலகம் முழுவதும் பரவியது. அலங்காரங்களை அவர்கள் பெரிதும் விரும்பினர். நொசஸ் நகரப் பெண்கள் எப்போதும் பல்வேறு விதங்களில் தம்மை அலங்காரம் செய்து கொண்டு காட்சியளித்தனர். உலகிற்கு அலங்காரக்கலையும் (Modaling) இங்கிருந்தே ஆரம்பமாகியது.

அந்நகரத்தில் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் ஆய்வுகளின்போது கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்டப் பொருட்களில் பல்வேறுபட்ட அலங்காரங்கள் தீட்டப்பட்டும் வார்க்கப்பட்டும் காணப்பட்டன. இந்நகரம் கி.மு 1400 ஆம் ஆண்டளவில் சிதைவடையலாயிற்று. கிரேக்க நாகரிக ஆரம்பத்தின் மற்றைய நாகரிகம் மய்சேனியன் நாகரிகமாகும்.

அந்த நாகரிகத்திற்குரிய மக்கள் கால்நடை வளர்ப்பு, வேட்டையாடல் ஆகிய தொழில்கள் வாயிலாக அன்றாடம் ஜீவியம் நடத்தினர். வேட்டையாடும் தொழிலில் பெண்களும் நல்ல திறமை பெற்றிருந்தனர். 'ஒலிவ்' எண்ணெய் தயாரிக்கும் முறையை இவர்கள் நன்கு கற்றிருந்தனர். அதனால், உணவு தயாரிப்பதில் 'ஒலிவ்' எண்ணெயைப் பயன்படுத்தினர். அத்தோடு நோய் நிவாரணியாக உடல் முழுவதும் 'ஒலிவ்' எண்ணெய் தடவுதல் மற்றும் விளக்கு எரித்தல் ஆகிய தேவைகளுக்காகவும் 'ஒலிவ்' (Olive Oil) எண்ணெயை பயன்படுத்தினர்.


பொக்சின் கலை


மினோவன் பெண்கள்


மய்சோனிய ஆயுதங்கள்

மலை உச்சிகளில் கோட்டைகளை அமைப்பதில் இவர்கள் திறமை பெற்றிருந்தனர். இவர்களது நகரம் எதிரிப்படைகளில் இருந்து பலமான பாதுகாப்பைப் பெற்றிருந்தது. அதற்காக 'அக்ரோபொலிஸ்' என்ற பாதுகாப்புப் படையையும் அமைத்திருந்தனர். இன்று பாதுகாப்புக்காக நவீன படைபலங்கள் இருந்தாலும் அதன் முன்னோடியாக 'மய்சோனியா' நாகரிகமே அமைந்தது.

இந்த நாகரிகம் கி.மு 1400 ஆம் ஆண்டளவில் உலகில் ஓரளவுக்கு செல்வாக்குப் பெற்றிருந்தது. இந்த நாகரிகத்தின் அரச இலச்சினை இரண்டு சிங்கங்களாகும். இருந்த போதும் எதிரிப்படைகளின் ஆக்கிரமிப்பு காரணமாக இந்த நாகரிகமும் அழிக்கப்பட்டது. கிரேக்க நாகரிகத்தின் தோற்றம் இந்த இரு நாகரிகங்களாலும் ஆனதாகும். கிரேக்க நாகரிகம் இன்றும் உலகம் முழுவதும் மெச்சப்படும் அளவுக்கு பல்வேறு சிறப்புக்களைப் பெற்றிருந்தது.


அலங்காரா மய்சோனியப் பெண்

அமீர் ஹுஸைசன்

## புராதன காலத்து இராட்சதப் பூனை

வெனிசுவெலாவில் புராதன காலத்து இராட்சதப் பூனையின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எண்ணெய் அகழ்வு ஆராய்ச்சி நடவடிக்கைகளின் போதே இந்த எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

கடந்த 60 ஆண்டு காலப் பகுதியில் தென் அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட மிக முக்கிய கண்டுபிடிப்பு இதுவென்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த ஆய்வின்போது ஆறு இராட்சதப் பூனைகளின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அவை சிறுத்தைகள், ஓநாய்கள், ஒட்டகங்கள், அமெரிக்கக் கழுகுகள், வாத்துகள் மற்றும் குதிரைகள் ஆகியவற்றின் எச்சங்களுடனேயே கண்டுபிடிக்கப்பட்டதாகவும் இவை யாவும் பதினெட்டு லட்சம் வருடங்களுக்கு முற்பட்டவை என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.




இதில் முக்கியமான கண்டுபிடிப்பு இராட்சதப் பூனையொன்றின் முழுமையான எலும்புக்கூடு என்றும் இந்த மிருகம் தென் அமெரிக்காவில் முன்னொரு போதும் காணப்படாதது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்தப் பூனை இனம் ஐந்து லட்சம் வருடங்களுக்கு முன்னரே தென் அமெரிக்காவில் அழிவடைந்து விட்டது என்றும் நம்பப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க வேர்ஜின் தீவுகள்



உலகில் அழகிய கடற்கரையோரத்தையும் அதை அனுபவித்து மகிழ்வதற்குரிய தங்குமிடங்களையும் அமெரிக்க வேர்ஜின் தீவுகள் கொண்டுள்ளன. வருடாந்தம் பெருந்தொகையான உல்லாசப் பயணிகள் தங்கிச் செல்லும் இத்தீவு, 'உலகின் சொர்க்கபுரி' எனவும் அழைக்கப்படுகின்றது.

கி.பி 1500 ஆம் ஆண்டளவில் இத்தீவுகளில் குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதுவரை அங்கு இந்தியர்களே வாழ்ந்து வந்தனர். ஐரோப்பியர்கள் இத்தீவிற்கு வருகை தரும்பொழுது சீபொனிஸ், அராவக், காரிப் ஆகிய மூன்று இந்திய கோத்திரத்தார்கள் இங்கு வாழ்ந்து வந்துள்ளனர். 1493 இல் கொலம்பஸ் உள்ளிட்ட அவரது குழுவினர் இங்கு வருகை தந்துள்ளனர். அதன்பின் கழிந்த 150 வருட காலகட்டத்தினுள் ஆங்கிலேயர்,பிரான்சியர்,ஸ்பானியர் மற்றும்



மோல்டா இனத்தவர்கள் தமது ஆதிக்கத்தை இங்கு நிலைநாட்ட முயற்சித்துள்ளனர். இறுதியில் 1672இல் டென்மார்க் இனத்தவர்கள் நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றினர்.

இத்தீவுகளின் பிரதான பொருளாதார நடவடிக்கைகளாக கடந்த காலத்தில் கரும்பு வர்த்தகமும் அடிமை வியாபாரமுமே







காணப்பட்டன.


முதலாம் உலக யுத்தத்தின் போது இத்தீவுகள் குறித்து ஐக்கிய அமெரிக்கா அதிக கவனம் செலுத்தியது. அதன்பின்னர் தொடர்ந்து 14 வருடங்கள் இத்தீவுகள் அமெரிக்க கடற்படையினரின் கீழ் இருந்தன.

20 ஆம் நூற்றாண்டில் உல்லாசப் பயணத் துறையின் மையமாக இத்தீவுகள் விளங்கியதால் அதிகமானோரின் கவனம் இத்தீவுகள் மீது திரும்பியது. அதேவேளை, அதிகளவு இயற்கை அனர்த்தங்களுக்கும் இத்தீவுகள் முகம் கொடுப்பதால் கடந்த காலங்களில் பெரும் அழிவுகளையும் நஷ்டங்களையும் எதிர்கொண்டன.

இந்நாட்டில் கலப்பு கலாசாரமே நிலவுகின்றது. இந்திய இனத்தவர்களின் தொடர்புகள் படிப்படியாக இல்லாமல் போனதையடுத்து, ஐரோப்பியர்களின் வருகையோடு ஐரோப்பிய கலாசாரம் பரவத் தொடங்கியது. ஆங்கில மொழியையே இத்தீவுகளில் மக்கள் அதிகமாகப் பயன்படுத்துகின்றனர்.

- **நிலப்பரப்பு:**135கிலோ மீற்றர்.
- **பிரதான நகரம்:** சார்லொட்டே அமாலி.
- **இனங்கள்:** ஆபிரிக்க வம்சாவளியினர், அமெரிக்காவில் இருந்து வருகை தந்தமக்கள், போட்டோரிக்கோ இனத்தவர்கள்.
- **மொழி:** ஆங்கிலம், ஸ்பானியம், பிரெஞ்ச்.
- **மதம்:** பெப்டிஸ்ட், கத்தோலிக்கம், எப்பிசோகோபாலியன்.
- **ஆட்சிமுறை:** ஐக்கிய அமெரிக்க வலயம்.
- **ஆட்சித் தலைவர்:** ஆளுனர்.
- **முக்கிய கைத்தொழில்கள்:** உல்லாசப் பயணத்துறை, எண்ணெய் சுத்திகரிப்பு.
- **முக்கிய வர்த்தக தொடர்பு நாடுகள்:** ஐக்கிய அமெரிக்கா, போட்டோரிக்கோ.

# பிரிட்டிஷ் வேர்ஜின் தீவுகள்



உலகில் மிக அழகிய தீவுகளில் பிரிட்டிஷ் வேர்ஜின் தீவுகளே முதலிடம் வகிப்பதாகக் கருதப்படுகிறது. இத்தீவுகளில் உள்ள அழகிய கடற்கரை ஓரங்களும் பசுமையான மலைகளும் அதிகமானோரின் மனதைக் கொள்ளை கொண்டுள்ளன. நாட்டில் உல்லாசப் பயணத் துறை சிறந்த முறையில் மேற்கொள்ளப்படுவதால் பெரும் தொகையை அந்நியச் செலாவணியாகப் பெறுகின்றது.

- **மொத்த நிலப்பரப்பு:** 59 சதுர கிலோமீற்றர்.
- **முக்கிய நகரம்:** ரோட் டவுன்.
- **இனங்கள்:** ஆபிரிக்க வம்சாவளியினர்,வட அமெரிக்கர்கள், ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்கள்.
- **மொழி:** ஆங்கிலம்.
- **மதம்:** மெத்தடிஸ்ட், அங்கிலிக்கன்,கத்தோலிக்கம்.
- **நிர்வாகம்:** பிரித்தானியாவுக்குச் சொந்தமான நாடாகும்.
- **நாட்டின் தலைவர்:**ஆளுனர்.
- **அரச தலைவர்:** பிரதான அமைச்சர்.
- **முக்கிய கைத்தொழில்:** உல்லாசப் பயணத்துறை, சிறுகைத் தொழில், ரம்,கொங்றீட் என்பன.
- **முக்கிய வர்த்தகத் தொடர்பு நாடுகள்:** ஐக்கிய அமெரிக்கா, அமெரிக்க வேர்ஜின் தீவுகள், போட்டோரிக்கா.

## கலாசாரம்

இந்திய வம்சாவளியினரின் தொகை குறைந்த நிலையில், ஆபிரிக்கர்களையே இங்கு அதிகம் காணக்கூடியதாக இருக்கின்றது. உணவுப் பழக்கம், பண்டிகை,விழாக்கள் அனைத்தும் ஆபிரிக்கர்களின் கலாசாரத்தை ஒட்டியதாகவே இருக்கின்றன. ஐரோப்பியர்களின் கலாசாரமும் ஓரளவுக்கு இருக்கின்றது. இத்தீவிலுள்ளவர்கள் இசையை பெரிதும் விரும்புபவர்களாக திகழ்கின்றனர்.

'அராவக்' இந்தியர்கள் கி.மு 100ஆம் ஆண்டளவில் பிரிட்டிஷ் வேர்ஜின் தீவுகளுக்கு வந்ததாக வரலாறு




கூறுகின்றது. இவர்கள் தென் அமெரிக்காவின் 'ஒரினாக்கோ' நதிக்கழிமுகப் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்து வந்ததாக நம்பப்படுகின்றது. இத்தீவுகளுக்கு ஏனைய இனத்தவர்கள் 15 ஆம் நூற்றாண்டளவிலேயே வருகை தந்துள்ளனர். அதனையடுத்து இரு தசாப்தங்களுக்குப் பின் க்ரிஸ்டோபர் கொலம்பஸ்ஸின் கடற்பயணக் குழுவினர் இத்தீவிற்கு வந்துள்ளனர். கொலம்பஸ்தான் இத்தீவுகளுக்கு 'வேர்ஜின் தீவுகள்' என்று பெயர் வைத்தார். இத்தீவுகளில் முதன்முதலாக நிரந்தரமாகக் குடியேறியவர்கள் நெதர்லாந்து இனத்தவர்களே. அவர்கள் குடியேறியது 1648 இல் ஆகும். அதேவேளை, 1672 இல் ஆங்கிலேயர் இத்தீவுகளுக்கு வருகை தந்தனர். அதன்பின்




இத்தீவுகள் அடிமை வியாபாரத்திற்கும் கரும்புப் பயிர்ச் செய்கைக்கும் உட்பட்டு பிரசித்தமடைந்தது. 19 ஆம் நூற்றாண்டில் இத்தீவுகளில் அமெரிக்கர்களின் தலையீட்டினால்



விவசாயம்,விலங்கு வேளாண்மை என்பன விருத்தியடைந்து, நாடு பொருளாதாரத்திலும் கூடிய வளர்ச்சி காணத் தொடங்கியது. இன்றளவில் கைத்தொழிற்துறை மற்றும் சுதந்திர வங்கி நடவடிக்கைகளிலும் முன்னேற்றமடைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் சிரிக்க வைக்கும் 'எஸ்டெரிக்ஸ்'



'எஸ்டெரிக்ஸ்'(Asterix), நாம் அனைவரும் நன்கறிந்த 'கார்ட்டூன்' கதாபாத்திரமாகும். இந்த எஸ்டெரிக்ஸ் கதாபாத்திரம் சித்திரக்கதை ஊடாக பிரசித்தம் பெற்ற படைப்பு என்றே கூறவேண்டும். இது பிரபல்யமடைந்ததை அடுத்து 'கார்ட்டூன்' தொடராகவும் திரைப்படமாகவும் ரசிகர்களிடையே வலம் வரத் தொடங்கியது.

## கோல் தேசத்து மக்களும் மெஜிக் கசாயமும்

கோல் தேசத்தின் (முன்னாள் பிரான்ஸ் தேசம்) கிராமம் ஒன்றைக் கைப்பற்றிக் கொள்ள முயற்சிக்கும் ரோம நாட்டுப் படையும் அவர்களுக்கு எதிராகப் போராடும் அக்கிராமத்தில் இருக்கும் மக்கள் பற்றியும் 'எஸ்டெரிக்ஸ்' கதையில் கூறப்படுகின்றது. எஸ்டெரிக்ஸ், ஒபிலிக்ஸ் (Obilix) உட்பட அவர்களின் நண்பர்களுக்கு அதீத பலத்தைப் பெற்றுக் கொடுக்கும் மெஜிக் கசாய பானத்தினை பூசகர் ஒருவர் தயாரித்துக் கொடுக்கின்றார்.

அவரின் பெயர் கெடஃபிக்ஸ் (Gatafix). இந்த மெஜிக் கசாய பானத்தினை அருந்தியவுடன், திடீரென அதீத பலத்தைப் பெறும் கோல் தேசத்தவர்கள், ரோமப் படையுடன் ஒவ்வொரு முறையும் போராடி வென்று பலதரப்பட்ட சவால்களையும் முறியடிக்கின்றனர்.

## எஸ்டெரிக்ஸை உருவாக்கிய நண்பர்கள்

எஸ்டெரிக்ஸின் வீரச் செயல்கள் பிரெஞ்ச் மொழியிலான சித்திரக் கதையாகவே முதன்முதலில் வெளியானது. எஸ்டெரிக்ஸ் கதாபாத்திரத்தை வடிவமைத்தவர் பிரான்ஸியரான ரெனோ கொசினி. இவரும் அல்பர்ட் உடசோவும் சிறந்த நண்பர்கள்.. உடசோ வியக்கத்தக்க வகையில் சித்திரங்களை வரைந்ததுடன், கொசினி கதையை எழுதினார். 1977 ஆம் ஆண்டு கொசினி இறந்ததன் பின்னர், உடசோ தனியே எஸ்டெரிக்ஸ் படைப்பினைத் தொடர்ந்தார்.



கொசினி மற்றும் உடசோ

எஸ்டெரிக்ஸின் வீரச் செயல்களை படைப்பதற்கு முன்னர், கொசினியும் உடசோவும் உம்ப்ஃபா-ஃபா (Oumpah-pha) என்ற நகைச்சுவை சித்திரக்கதையை படைத்திருந்தனர். இந்த சித்திரக்கதையானது, மிகவும் பிரபல்யமான 'கார்ட்டூன்' கதாபாத்திரம் கொண்ட இன்னுமொரு சித்திரக்கதையுடன் ஒரே பக்கத்தில் பிரசுரமானது. அந்த பிரபல்யமான கார்ட்டூன் தொடர்தான் டின்டின் (Tintin). எஸ்டெரிக்ஸின் வீரச் செயல்கள் அடங்கிய முதல் கார்ட்டூன் தொகுதி, பகுதி பகுதியாக 'பிலோட்' என்னும் சஞ்சிகையில் பிரசுரமானது.

## முதலாவது எஸ்டெரிக்ஸ் சித்திரக்கதை

1959 ஆம் ஆண்டு ஒக்டோபர் 29 ஆம் திகதி 'எஸ்டெரிக்ஸ்' சித்திரக் கதையின் முதல் பாகம் வெளியானது. இவ்வாறு தொடர்ச்சியாக வெளியான சித்திரக்கதையானது 1961 ஆம் ஆண்டு நூலுருப் பெற்றது. 'கோல் தேசத்தின் எஸ்டெரிக்ஸ்' என்ற பெயரில் அந்நூல் வெளியிடப்பட்டது. இதன் பின் ஒவ்வொரு ஆண்டும் புதிதாக அந்நூல் மறுபிரசுரம் செய்யப்பட்டது. கொசினியின் மறைவின் பின்னர் உடசோ தனியே கதையை எழுதினாலும் கொசினியின் கதை அளவுக்கு அவை சிறப்பாக இல்லை என்பதே விமர்சகர்களின் கருத்தாகும். சில கதைகள் வாசகர்களின் விமர்சனத்திற்கும் உட்பட்டன.

## எஸ்டெரிக்ஸின் பிரபலம்

எஸ்டெரிக்ஸ் மற்றும் ஒபிலிக்ஸின் வீரசாகசங்கள் அடங்கிய இத்தொகுதி, பற்பல நாடுகளில் 100 க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டது. எஸ்டெரிக்ஸின் கதைகள் வயது வேறுபாடின்றி அனைவராலும் ரசிக்கத்தக்க வகையில் படைக்கப்பட்டுள்ளன. எனினும், இவை அமெரிக்கா மற்றும் ஜப்பான் நாடுகளில் அவ்வளவாகப் பிரபல்யம் பெறவில்லை. ஏனெனில், எஸ்டெரிக்ஸ் கதைகளில் மறைந்திருக்கும் வீரதீரங்களை உணர்ந்து ரசிக்கும் அளவுக்கு அந்நாட்டு சித்திரக் கதை வாசகர்களுக்கு ஓய்வான மனநிலை இல்லை என்றே கூற வேண்டும். மேலும், அந்நாடுகளில் பல்வேறு முறைகளில் அமைந்த சித்திரக்கதைகள் பிரபல்யமாகியுள்ளன. அவற்றில் அவர்களுக்கே உரித்தான வீரகதாபாத்திரங்களும் உள்ளன.

## நகைச்சுவைக் கதைகள்

எஸ்டெரிக்ஸின் வீரசாகசங்கள் நகைச்சுவைகளையும் கேலிகளையும் கொண்டதாக உள்ளன. பிரான்ஸிய மக்களின் நகைச்சுவையும் அவர்களின் கேலியான சிந்தனைகளும் எஸ்டெரிக்ஸின் கதைகளுக்கு கருப்பொருளாக அமைந்தன.

## வெள்ளித்திரையிலும் தொலைக்காட்சியிலும்

எஸ்டெரிக்ஸ் மற்றும் ஒபிலிக்சின் வீரச்செயல்கள் உள்ளடங்கிய 33 சித்திரக் கதைகள் தற்போது வெளியாகியுள்ளன. இதுவரை தயாரிக்கப்பட்டுள்ள 'கார்ட்டூன்' படங்களின் எண்ணிக்கை 8. தவிர, 4 திரைப்படங்களுமாகும். இதனை, மையமாக வைத்து கணினி விளையாட்டுக்கள் பலவும் தயாரிக்கப்பட்டுள்ளன. புதிதாக தயாரிக்கப்பட்ட எஸ்டெரிக்ஸும் வைக்கிங்களும் என்ற 'கார்ட்டூன்' படமும் தற்போது வெளியாகியுள்ளன. அத்துடன், பீஜிங் ஒலிம்பிக்கை மையமாக வைத்து ஜனவரி 25 ஆம் திகதி 'எஸ்டெரிக்ஸ் அட் த ஒலிம்பிக்ஸ் கேம்ஸ்' என்ற திரைப்படம் வெளியானதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகைச



1988 இல் சோவியத், ஆப்கானிஸ்தானிலிருந்து படையை வாபஸ் வாங்கியது

**பனிப்போர் ஐரோப்பாவுக்கு வெளியே பல நாடுகளுக்கு பரவிச் சென்றது. அதனால், பனிப்போர் காலப்பகுதி உலகில் பிரச்சினைகளை அதிகப்படுத்திய காலப்பகுதியாக இருந்ததாக விமர்சகர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.**

இரண்டாவது உலகப்போர் முடிவடைந்து விட்டது. அதனைத் தொடர்ந்து அமெரிக்காவும் சோவியத் ரஷ்யாவும் உலகின் பிரதான இரு வல்லரசு அணிகளாயின. 1940 இலிருந்து 1990 வரை இந்த இரு தரப்புகளுக்கிடையில் நிகழ்ந்த மோதல்கள், அழுத்தங்கள் மற்றும் போட்டி மனப்பான்மை ஆகியன 'பனிப்போர்' என்ற பெயரினால் குறிப்பிடப்பட்டது. 1947 ஆம் ஆண்டில்தான் பனிப்போர் என்ற சொல் அறிமுகமானது. அமெரிக்க எழுத்தாளர்களான பேர்னாட் ப்ரோச் மற்றும் வோல்ட்டர் லிப்மன் ஆகியோரே இந்த பெயரைச் சூட்டினர்.

எவ்வாறாயினும், அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையில் நேரடி மோதல்கள் எதுவும் இடம்பெறவில்லை. ஆயினும், இந்த இரு நாடுகளுக்கிடையிலும் தீவிர போட்டித்தன்மையும் உளவுப் பிரிவினரின் தகவல்கள் சேகரிப்பும் வெளிப்படையாகவே இடம்பெற்றன. பனிப்போர் ஐரோப்பாவுக்கு வெளியே பல நாடுகளுக்கும் பரவியது. அதனால், பனிப்போர் காலப்பகுதி உலகில் பிரச்சினைகளை இரண்டு-மூன்று மடங்காக்கியதாக அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். இந்தப் பனிப்போரின் முக்கிய கட்டமாக கொரிய யுத்தத்தினைக் குறிப்பிட முடியும். 1950 முதல் 1953 இற்கு இடைப்பட்ட காலங்களில் இந்த யுத்தம் நடைபெற்றது. வடகொரியாவுக்கு சோவியத்தும் தென் கொரியாவுக்கு அமெரிக்காவும் உதவியதால் இந்த யுத்தத்தினை இரு வல்லரசுகளுக்கும் இடையிலான யுத்தம் என்றும் குறிப்பிட முடியும்.

## ஏவுகணைப் பிரச்சினை

1962 ஆம் ஆண்டு கியூப ஏவுகணைப் பிரச்சினையும் பனிப்போரினை தீவிரப்படுத்திய சம்பவமாக அமைந்தது. இதன்போது, கியூபா அரசாங்கத்திற்கு ஏவுகணையை அனுப்பி, அதன் ஊடாக அமெரிக்கா மீது தாக்குதல் நடத்த முயற்சிக்கப்பட்டதாக சோவியத் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

அதன் பின்னர், 1964-1975 காலப்பகுதிகளில் இடம்பெற்ற வியட்நாம் யுத்தமும் பனிப்போர் காலத்தில் இடம்பெற்ற மற்றுமொரு முக்கிய நிகழ்வாக வரலாற்றில் இடம் பெற்றுள்ளது. அமெரிக்காவினால் வியட்நாம் ஆக்கிரமிக்கப்பட்டது. இங்கு 'வியட்கோஸ்' கெரில்லாக்களின் எதிர்ப்புக்கு முன்னால் அமெரிக்கா பின்வாங்க நேரிட்டது. ஹோச் சிமிங் தலைமையின் கீழ் இந்த யுத்தம் ஒழுங்கமைக்கப்பட்டது. அத்துடன், 1979 காலப் பகுதியில் சோவியத், ஆப்கானிஸ்தானுக்குள் பிரவேசித்ததும் பனிப்போரில் முக்கிய நிகழ்வாக அமைந்தது.



இந்த சம்பவங்களினால் உலகம் இரண்டு அணிகளாகப் பிரிந்தது. இந்த பிரிவுக்குக் காரணமாக அமைந்தது பொருளாதார முறைகளாகும். முதலாளித்துவ பொருளாதாரத்தைப் பின்பற்றிய நாடுகள் அமெரிக்காவைப் பின்பற்றி அணிதிரண்டன. அதேபோன்று சோசலிசப் பொருளாதாரத்தினைப் பின்பற்றிய நாடுகள் சோவியத்தினைப் பின்பற்றி அணிதிரண்டன. பிரான்ஸ், பிரித்தானியா, கனடா ஆகிய நாடுகள் முதலாளித்துவ அணியில் இடம்பெற்ற அதேவேளை, சீனா, கியூபா, வியட்நாம் ஆகிய நாடுகள் சோசலிச அணியினை பிரதிநிதித்துவம் செய்தன. எனினும், இவ்விரண்டு அணிகளிலும் இடம்பெறாது சுயாதீனமாக செயற்பட்ட நாடுகளும் உள்ளன. இவ்வாறு சுயாதீனமாக செயற்பட்ட நாடுகள் பலம் அற்ற நாடுகளாக இருந்தன. இந்தப் பின்னணியில் உலகின் எந்தப் பகுதியிலாவது மோதல் ஏற்பட்டு, அது மூன்றாம் உலக யுத்தமாக மாறும் என்று பலரும் கருதினர்.

பனிப்போர் தீவிரமடைந்து கொண்டிருந்தவேளை, தொழில்நுட்ப ரீதியிலும் தந்திரோபாயமாகவும் பல நாடுகளை அணியில் இணைத்துக் கொள்ள இரு பிரதான தரப்பும் நடவடிக்கைகளை எடுத்து வந்தன. ஆயுத மோதல்கள் தமது நாட்டிற்கும் அழிவை ஏற்படுத்தும் என்பதனால் ஆயுதங்களை விடுத்து இராஜதந்திரத்தினை ஓர் ஆயுதமாக இரு பிரதான நாடுகளும் பயன்படுத்திக் கொண்டன.

மறுபுறம் போட்டித்தன்மையின் அடிப்படையில் அவர்கள் பல ஆயுதங்களைத் தயாரித்தனர். கணினியினால் தன்னிச்சையாக இயங்கி, தாக்குதல் தொடுக்கக்கூடிய ஆயுதங்கள் இக்காலப்பகுதியில்தான் உருவாக்கம் பெற்றன. இவ்வாறு சுயமாக இயங்கக் கூடிய கணினித் தொகுதி ஆயுதங்களுக்கு தவறான சமிக்ஞைகள் சென்று, மோதல்கள் வெடிக்கக்கூடும் என்றும் நாடுகளிடையே அச்சம் நிலவியது.


இந்த ஆயுதப் போட்டியின் பயங்கர ஆபத்தினை உணர்ந்து கொண்ட அன்றைய அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி காட்டர் 1979 இல் சமாதான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட நடவடிக்கை எடுத்தார். இந்த ஒப்பந்தத்தினை "SALT II' என்ற சுருக்கமான பெயரில் குறிப்பிட்டனர். எனினும், உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட அமெரிக்காவும் சோவியத்தும் அந்தப் பணியினை நேர்மைத்திறனுடன் மேற்கொண்டதற்கான சான்றுகள் இல்லை. மாறாக, அவர்கள் தமது தரப்புக்குக் கிடைக்கும் நன்மைகளைப் பற்றியே அதிகமாக சிந்தித்தனர்.

## இரண்டாவது பனிப்போர்

1980 முதல் 1990 வரையான காலப்பகுதியினை ஒரு சிலர் 'இரண்டாவது பனிப்போர் காலம்' என்று வர்ணிக்கின்றனர். இதற்குக் காரணம், மேலே கூறப்பட்டவாறு ஏற்பட்ட இணக்கப்பாடாகும். இந்த இணக்கப்பாட்டின் அடிப்படையில், பகிரங்கமாக எதிர்ப்புணர்வினை வெளிக்காட்டாத வகையில் செயற்பட இரு தரப்பினரும் நடவடிக்கை எடுத்துக் கொண்டனர். இதற்கிடையில் அமெரிக்காவின் அரசியல் நிலைமையில் பெரிய மாற்றம் ஏற்பட்டது. ஜிம்மி காட்டரை தோல்வியடையச் செய்து ரொனால்ட் ரேகன் அதிகாரத்தினை பெற்றுக்கொண்டார். ரேகன் திறமை வாய்ந்த இராஜதந்திரம் மிக்க அரசியல்வாதியாவார். அதனால், அவர் ஆயுதங்களுக்குப் பதிலாக பலதரப்பட்ட உத்திகளை ஆயுதங்களாகப் பயன்படுத்தினார்.

ஆயுதங்களை உற்பத்தி செய்வதை விட, தமது உளவுப் பிரிவினை அவர் பலப்படுத்தினார். அமெரிக்க மத்திய உளவுப் பிரிவான சி.ஐ.ஏ யினை பலதரப்பட்ட நாடுகளுக்கும் அனுப்பி பயங்கரவாத அமைப்புகளைத் தோற்றுவித்தார். மேலும், கிளர்ச்சிக் குழுக்களை பயிற்றுவிக்கவென ரேகன் நிர்வாகம் சி.ஐ.ஏ அமைப்புக்கு 19.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கியது. ரேகன் நிர்வாகத்தினால் 'முஜாஹிதீன்கள்' அமெரிக்காவுக்கு அறிமுகம் செய்யப்பட்டனர். அமெரிக்க வம்சாவளியினரான இவர்கள், ஆப்கானிஸ்தானில் சம உரிமை கோரி போராடுவதாக அமெரிக்க மக்களை நம்ப வைத்தார். இந்த நிலை அமெரிக்காவின் அரசியல் தந்திரத்தினை வெளிப்படுத்துகின்றது. ரேகனுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் பிரித்தானியாவில் மார்க்ரட் தச்சர் அதிகாரத்திற்கு வந்தார்.

இந்த வகையில், அமெரிக்க தரப்பு பலம் பெறும்போது சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னோடித் தலைவர்கள் பலர் குறுகிய காலப்பகுதியில் மரணத்தைத் தழுவினர். அதனால், வயதான தலைவரை சோவியத் தேசத்தின் தலைவராக நியமிப்பது ஆபத்தானது என்று அந்நாட்டு அரசியல் அதிகாரிகள் சிந்திக்கத் தலைப்பட்டனர்.




பனிப்போரினால் பிளவிற்குட்பட்ட நாடுகள் அமெரிக்க ஆதரவு நாடுகள் நீலநிறத்திலும் சோவியத் ஆதரவு நாடுகள் சிவப்பு நிறத்திலும் குறித்துக் காட்டப்பட்டுள்ளன.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA



# கயே சூடாக்கிய பனிப் போர்






1987 இல் மிகாய்ல் கொர்பச்சேவ் மற்றும் ரொனால்ட் ரேகன் அணு ஆயுத கலைப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல்



1979 இல் SALT II ஒப்பந்தம் கைச்சாத்திடப்படல்

## அமெரிக்காவின் குரல்

இதற்கிடையில் 'அமெரிக்காவின் குரல்' எனும் வானொலி-தொலைக்காட்சி சேவை சோவியத்தில் ஒளி-ஒலிபரப்பாகி அம்மக்களுடன் தொடர்புகளைப் பேண ஆரம்பித்தது. சோவியத் தேசத்தில் இருந்த இரும்புத் திரையை கிழிக்க தமக்குப் போதிய வல்லமை இருப்பதாக அமெரிக்கா இதன் ஊடாக நிரூபித்துக் காட்டியது. இந்தச் செயற்பாட்டின் வல்லமை காரணமாக சோவியத் தேசத்தில் நிர்வாக மற்றும் பொருளாதார மறுசீரமைப்புக்கான தேவை ஏற்பட்டது.

## க்லாஸ்னோவ்

இந்த நிர்வாக மறுசீரமைப்பினை 'க்லாஸ்னோவ்' என்று குறிப்பிடுவர். இதனடிப்படையில் அதுவரை சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியிடம் இருந்த அரச சேவை செயற்பாடுகள் கண்காணிப்பு அதிகாரம் கலைக்கப்பட்டது. இந்த நிர்வாக மாற்றம் மிகவும் வசீகரமானதாக இருப்பினும் அது மிகக் குறுகிய காலத்தில் சோவியத் யூனியன் துண்டுகளாகப் பிளவுபடுத்துவதற்கும் வழியமைத்தது.

## பெரஸ்த்ரோய்கா

'பெரஸ்த்ரோய்கா' என்பது பொருளாதார மறுசீரமைப்பாகும். அன்றைய காலப்பகுதியில் அதிகாரத்திற்கு வந்த மிகாய்ல் கொர்பச்சேவ்வினால் இந்த மறுசீரமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. சோவியத்தில் நிலவி வந்த சோசலிச பொருளாதார முறையைத் தகர்த்தெறிந்து, முதலாளித்துவ பொருளாதார முறையை தழுவிக் கொள்ள வழி ஏற்படுத்தும் அளவுக்கு அது பிரபல்யம் வாய்ந்த சீர்திருத்தமாக அமைந்தது.

இவ்வாறு சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் பனிப்போர் முடிவுக்கு வந்தது. எனினும், இந்தக் காலப்பகுதி உலகில் நெருக்கடியினை ஏற்படுத்தக்கூடிய காலப்பகுதியாகக் கருதப்படுகின்றது. அன்று ஏற்பட்ட பிரச்சினைகளின் 'புராதன சின்னங்கள்' இன்றும் எஞ்சியிருந்து அந்நாட்டு மக்களின் வாழ்க்கையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன.

பனிப்போரின் இறுதிப்பகுதியானது கடன் மற்றும் உதவிகளினால் உலகில் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் நடைமுறையுடன் ஆரம்பிக்கின்றது. இதன்படி, உலக வரலாற்றில் ஒரு நாடு இன்னுமொரு நாட்டினை ஆக்கிரமிக்க பலவிதமான வழிமுறைகளைக் கையாள்கின்றது. அவையாவன:

1. ஆயுதங்கள், 2. உளவுப்பிரிவு சேவைகள், 3 உதவிகள், கடன்கள், 4. வர்த்தகம் என அவற்றை வகைப்படுத்திக் கொள்ளமுடியும்.

எவ்வாறாயினும், அமெரிக்கா 'உலகப் பொலிஸ்காரன்' என்ற அடையாள மாற்றத்தினை 90 களில் பெற்றது. இந்த தசாப்தம் முழுவதும் அமெரிக்கா தனது ஏகாதிபத்தியத்தினை உலகம் முழுவதும் பரப்பியது. எனினும், இந்த விஸ்வரூபத்திற்கு எதிராக ஒரு சில நாடுகள் எழுச்சி பெறாமலும் இல்லை. சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளும் இவற்றுள் அடங்கும். அதனால், தமது அதிகார பலத்தினை மட்டுப்படுத்திக் கொண்டு அனைவருக்கும் நீதியான சமூகத்தினை கட்டியெழுப்ப மேற்கொள்ளும் முயற்சிகளையும் அமெரிக்கா மேற்கொள்வதையும் தற்போதைய நவீன உலகில் காணமுடிகின்றது.

## பனிப்போரின் கால வரையறை

* 1947 இல் அமெரிக்காவின் உதவி மற்றும் நிதி உதவிகளுடன் ஐரோப்பிய நாடுகளில் யுத்தத் திட்டம் தயாரிக்கப்பட்டது.
* 1948 இல் சோவியத்தினால் மேற்கு ஜேர்மனிக்கு இடையூறு விளைவிக்கப்பட்டது.
* 1949 வட அட்லாண்டிக் உடன்பாட்டு நிறுவனம் (நேட்டோ) தோற்றம். எனினும், சீனாவின் கம்யூனிஸ்ட் அதிகாரத்தை உறுதிப்படுத்துவதில் சோவியத் வெற்றி கண்டது.
* 1950 இல் கொரியா யுத்தம் ஆரம்பமானது. சோவியத்தின் உதவியுடன் வடகொரிய தென் கொரியாவை ஆக்கிரமிப்பு செய்தது. தென் கொரியாவுக்கு அமெரிக்கா உதவி செய்தது.
* 1953 இல் சோவியத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் மரணம்.
* 1955 இல் நேட்டோ அமைப்புக்கு போட்டியாக வோர்சோ அமைப்பு உருவானது.
* 1956 இல் ஹங்கேரியாவில் கம்யூனிஸ்ட் நிர்வாகத்தினை ஏற்படுத்த சோவியத் நடவடிக்கை எடுத்தது.
* 1959 இல் ஃபிடெல் கெஸ்ட்ரோ கியூபாவின் தலைமையை ஏற்றதுடன், அவர் சோவியத்துடன் இணைந்து பணியாற்ற முனைந்தார்.
* 1961 பேர்லின் [illegible] நாட்டிலிருந்து தப்பியோடுவதைத் தடுப்பதற்காக ஒரே நாளின் இரவுப் பொழுதில் இச்சுவர் கட்டப்பட்டது. கிழக்கு ஜேர்மனி அதனை நன்கு பாதுகாத்தது.
* 1963 இல் அமெரிக்கா மற்றும் சோவியத்துக்கு இடையில் அணு ஆயுதங்களை கட்டுப்படுத்தும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.
* 1964 இல் அமெரிக்கா வியட்நாமுடன் போரிட்டதுடன் அங்கு வியட்கோஸ் கெரில்லாக்களின் எதிர்த்தாக்குதலால் அமெரிக்கா பின்வாங்க நேரிட்டது.
* 1968 இல் சோவியத்தினால் செக்கொஸ்லோவேக்கியா ஆக்கிரமிக்கப்பட்டது.
* 1979 இல் சோவியத்தினால் ஆப்கானிஸ்தான் ஆக்கிரமிக்கப்பட்டது.
* 1990 மிகாய்ல் கொர்பச்சேவ்வினால் பொருளாதார அரசியல் நிர்வாக மறுசீரமைப்புப் பணிகள் அறிமுகம் செய்யப்பட்டது. அதன் பலனாக சோவியத் யூனியன் பிளவுபட்டது. இது பனிப்போரின் முடிவாகவும் அமைந்தது.

## நேட்டோ அமைப்பு




*1949 ஆம் ஆண்டு ஏப்ரல் 4 ஆம் திகதி 'நேட்டோ' அமைப்பு உருவாக்கப்பட்டது. இதன் தலைமையகம் பெல்ஜியத்தில் உள்ளது. அமெரிக்காவின் நேச நாடுகள் இணைந்து இந்த அமைப்பை ஸ்தாபித்தன. பிற நாடுகளின் அச்சுறுத்தல்களினை சமாளிக்க இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது.*

*நேட்டோவை எதிர்கொள்ளவென 'வோர்சோ' அமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பு சோவியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் காலாவதியானது.*

**-பிரியதர்ஷினி**

பேர்லின் சுவரின் தற்போதைய தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளியின் நன்றியுணர்வு

முன்னொரு காலத்தில் வேடன் ஒருவன் விஷம் தடவிய அம்பு ஒன்றை ஒரு மானின் மீது எய்தான். குறி தவறியதால் அம்பு ஒரு மரத்தின் மீது பட, அதன் விஷம் காரணமாக அந்த மரம் சிறிது சிறிதாகக் காய ஆரம்பித்தது. அதன் கிளைகள் காய்ந்து ஒடிந்து விழுந்தன.

அந்த மரத்தின் பொந்தில் ஒரு கிளி வசித்து வந்தது. மரம் காய ஆரம்பித்ததும், அதில் இருந்த மற்றப் பறவைகள் எல்லாம் வேறு மரங்களை நாடிப் போய்விட்டன.

ஆனால், இந்தக் கிளி மட்டும் மரத்தை விட்டு எங்கும் செல்லாமல் தானும் வாட ஆரம்பித்தது. "மரம் பட்டுப் போனால் நானும் அதன் கூடச் சாவேன்" என்று கூறிப் பிடிவாதமாக இருந்தது.

இதைக் கவனித்த தேவன் அந்தக் கிளியைப் பார்ப்பதற்காக வந்தார். அவர் கிளியைப் பார்த்து, "கிளியே நீ இருக்கும் மரத்தில் இலைகளும் கிடையாது. பழங்களும் கிடையாது. எந்தச் சமயம் ஒடிந்து விழுமோ என்கிற நிலையில் மரம் இருக்கிறது. இந்தக் காட்டில் ஆயிரக்கணக்கான மரங்கள் இருக்கின்றன. அவற்றில் கனிகள் காய்த்துத் தொங்குகின்றன. அந்த மரங்களில் உன்னைப் போன்ற கிளிகள் வசிக்க அழகிய பொந்துகள் உள்ளன. அப்படியிருக்க நீ ஏன் அங்கெல்லாம் போகாமல் இந்தக் காய்ந்த மரத்தைக் கட்டிக் கொண்டு அழுகிறாய்?" எனக் கேட்டார்.





அதற்கு அந்தக் கிளி, "தேவனே! நான் இந்த மரத்தில்தான் பிறந்தேன். இந்த மரத்தில்தான் வளர்ந்தேன். இந்த மரம்தான் எனக்குத் தின்னப் பழம் கொடுத்ததோடு, என்னை என் எதிரிகளிடமிருந்தும் காப்பாற்றியது. இன்று இது கஷ்டநிலையில் இருக்கும்போது, நான் எப்படி இதை விட்டு என் இன்பத்தை மட்டும் நாடிப் போவேன். இந்த மரத்தில்தான் இன்பத்தைக் கண்டேன். ஆகவே, இதே மரத்தில்தான் நான் துன்பத்தையும் சகித்துக் கொள்ள வேண்டும். ஆகவே, இந்த மரத்தை விட்டுப் போ என்று ஏன் எனக்குத் தவறான புத்திமதி கூறுகிறீர்கள்" என்று கேட்டது.

கிளியின் நன்றியுணர்வைக் கண்ட தேவன் மிக்க மகிழ்ச்சியடைந்தார். "நண்பர்கள் என்றால், இப்படியல்லவா இருக்கவேண்டும். நல்ல காலத்தில் ஒன்றாக இருந்து விட்டு, ஆபத்துக் காலத்தில் பிரிந்து போவது நட்பாகாது. உனது உண்மையான நட்பைக் கண்டு பூரிப்படைகிறேன். நீ ஏதாவது வரம் கேள். தருகிறேன்" என்றார் தேவன்.

"இந்த மரம் முன்பு போல பூ, இலைகள், கனிகளுடன் தழைத்து இருக்கவேண்டும் என்று வரம் தாருங்கள்" என்றது கிளி.

"அப்படியே வரம் தந்தேன்" என்று வரம் கொடுத்தார் தேவன். அவர் கூறி முடித்ததுமே மரம் முன்போல இலைகளுடனும் கிளைகளுடனும் மலர்களுடனும் கனிகளுடனும் விளங்க ஆரம்பித்தது.

இன்றும் கூட சில பசுமையான மரங்களில் வாழும் கிளிகள் அம்மரம் காய்ந்தாலும் கூட, அம்மரத்தை விட்டுச் செல்லாமல் அம்மரத்திலேயே வாழ்வதைக் காணலாம்.

"அக்கிளியைப் போல நாமும் நன்றியுள்ளம் படைத்தவர்களாக வாழ வேண்டும் என்றே அவை அவ்வாறு செயற்படுகின்றன" எனும் நம்பிக்கை இன்றும் எம்மில் சிலரிடம் காணப்படுகின்றது.

செ.பகீரதன்

## சிந்தனைத் துளிகள்


- உன் பெருமைக்காக குளிர் நீரைப் பயன்படுத்தாதே. உன் உடல் நலத்திற்காக கொதித்தாறிய நீரைப் பயன்படுத்து.
- முகத்தைப் பார்த்து எடை போடாதே. அகத்தைப் பார்த்து எடை போடு.
- நற்பழக்கத்தைக் கடைப்பிடிக்குமாறு பிறருக்கு கூறு. நீயும் நற்பிரஜையாக மாறுவாய்.
- கடமையை செய்யுங்கள். புகழ்மாலை உங்கள் காலடியில்.
- வணங்க ஆரம்பிக்கும் போது வளர ஆரம்பித்து விடுகிறோம்.
- கடமையை செய்ய முற்படு. அப்போது உன் தகுதியை நீ அறிவாய்.
- தீமை செய்பவர்களுக்கு நன்மை செய்வது உத்தமர் வழக்கம்.
- பணம் உள்ளவனாக இருப்பதை விட பண்புள்ளவனாக இருப்பது மேல்.
- கவலையற்ற எதிர்காலத்திற்கு கல்வியே பிரதானம்.

தொகுப்புபு: சி.திருச்செல்வம்,
ப/தொட்டுலாகலை த.க.வித்., அப்புத்தளை.

## பொது அறிவு

1. முதலாவது சார்க் மாநாடு நடைபெற்ற இடம் எது? *டாக்கா*
2. உலக சமாதான தினம் எப்போது அனுஷ்டிக்கப்படுகிறது? *ஒக்டோபர் 24 ஆம் திகதி*
3. மின்குமிழினுள் அடைக்கப்படும் வாயுக்கள் எவை? *ஹீலியம், நியோன்*
4. அணுகுண்டு தயாரிக்கப் பயன்படும் மூலகங்கள் எவை? *யுரேனியம், புளூட்டோனியம்*
5. மலேரியா நோயை பரப்பும் நுளம்பு எது? *அனோபிலிஸ் (பெண் நுளம்பு)*
6. தொண்டைக்கழலை நோய் ஏற்படக் காரணம் என்ன? *அயடின் குறைபாடு*
7. குருதி உறையா நோய் எது? *ஈமோபிலியா*
8. சுகதேகி ஒருவரின் சிறுநீரின் வீதம் யாது? *90%*

தொகுப்பு: ஆர்.சனுஜா,
றோ.க.த.வித்., மாம்புரி, புத்தளம்.



## காலைப் பொழுது

காலைக்காற்றே இளங்காற்றே
கவிதைகள் நீயும் சொல்லாயோ?
வேதனை மறந்து நாமெல்லாம்
உந்தன் அழகில் மயங்குகிறோம்.

காலைப்பொழுதே உன்மீது
கோபம் கொள்பவர் யாருள்ளார்?
சூரியன் உதிப்பது காலையிலே
மலர்கள் மலர்வதும் காலையிலே

காலையில் எழுந்து நாமெல்லாம்
உந்தன் அழகை ரசிக்கின்றோம்
அதில் பெறும் இன்பங்கள் பலகோடி
அவற்றால் இனிதே மகிழ்ந்திடுவோம்.

ச.இலட்சிகா,
கிளி.முருகானந்தா ம.வித்.,
முரசுமோட்டை.




## உலகில் பெரியவை

1. மிகப் பெரிய கண்டம் – ஆசியா
2. மிகப் பெரிய பாலைவனம் – சகாரா
3. மிகப் பெரிய தேவாலயம் – சென் பீற்றர்ஸ்[ரோமாபுரி]
4. மிக ஆழமான கடல் – பிலிப்பைன்ஸுக்கு அகில் உள்ள மிண்டான்யோ [5 மைல் ஆழம்]
5. மிக உயரமான பறவை – தீக்கோழி
6. மிகப் பெரிய வைரக்கல் சுரங்கம் – கிமிப்பலி [தென்னாபிரிக்கா]
7. மிகப் பெரிய நூதனசாலை – பிரிட்டிஷ் நூதனசாலை [லண்டன்]
8. உலகின் மிகப்பெரிய பூங்கா – கெனடாவில் உள்ள அல்பெடா என்னும் இடத்திலுள்ள உப்பீலஸ்லோ தேசிய பூங்கா

தொகுப்பு: யோ.ஹிரிஜா தாரிணி,
பதுளை த.ம.வித்.,




விஜய்
மாணவர் கழகம்

படத்தை இங்கே ஒட்டவும்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்:.......................................
முகவரி:.......................................
.......................................
பாடசாலை:.......................................
வகுப்பு:.......................................

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2037
கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



பி.கண்ணா,
தரம் - 8A,
சென்.ஜோசப் த.ம.வித்.,
மஸ்கெலியா.



எம்.இஸட்.எஃப்.சம்லா,
தரம் - 7E,
மதீனா தேசிய பாட.,
மாரபிட்டிய.



ஐ.இந்துஷான்,
தரம் - 4D,
க/கதிரேசன் ம.கல்.,
நாவலப்பிட்டி.



கே.பிரசாந்த்,
தரம் - 11B,
அல்-அக்ஸா மு.ம.ம.வித்.,
எஹலியகொடை.



வி.எம்.ரஹீம், தரம் - 10B,
தி/அல்-ஹம்றா ம.வித்.,
தோப்பூர்.



எம்.என்.அகீலா,
தரம் - 2,
கராகொட மு.ம.வித்.,
எட்டியாந்தோட்டை.



எம்.எம்.எஃப்.ஸஃப்ரா,
தரம் - 6Y,
ஸாஹிரா தேசிய பாட.,
மாவனல்லை.



சா.கனகேஸ்வரி,
தரம் - 6A,
நெளுக்குளம் கலைமகள்
ம.வித்., நெளுக்குளம்.

# விஜய் மாணவர் கழகம்



அங்.இல : 2091

இ.கௌசிகன்,
தரம் - 6E,
இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.



அங்.இல : 2092

எம்.ஏ.எப்.பஸோனா,
தரம் - 2N,
மட்/நூறானியா வித்.,
காத்தான்குடி-06.



அங்.இல : 2093

சி.பிரவீன்,
தரம் - 5F,
இந்து ஆரம்ப பாட.,
யாழ்ப்பாணம்.



அங்.இல : 2094

எ.சஞ்ஜீவராஜ்,
தரம் - 6A,
கோணேஸ்வரா இந்துக் கல்.,
திருகோணமலை.



அங்.இல : 2095

தி.டிக்சன்,
தரம் - 8F,
தமிழ் மத்திய ம.வித்.,
வவுனியா.



அங்.இல : 2096

ஏ.டி.ஜெரிஜோன்சன்,
தரம் - 8C,
மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்.



அங்.இல : 2097

ந.நகுலன்,
தரம் - 9,
தேவிபுரம் அ.த.க.பா.,
முல்லைத்தீவு.



அங்.இல : 2098

ஏ.எம்.எம்.ஸாஹிர்,
தரம் - 11E,
ஸாஹிரா தே.கல்.,
கல்முனை.



அங்.இல : 2099

மா.சுதர்சன்,
தரம் - 11B,
வட்டக்கச்சி ம.வித்.,
கிளிநொச்சி.



அங்.இல : 2100

தர்மராசா தர்சன்,
தரம் - 11,
ஜெயபுரம் ம.வித்.,
கிளிநொச்சி.



அங்.இல : 2101

பா.கபில்நாத்,
தரம் - 12B,
யா/நெல்லியடி மத்திய
ம.வித்., நெல்லியடி



அங்.இல : 2102

க.சிவநந்தன்,
தரம் - 12,
யா/செம்பியன்பற்று
அ.த.க.பா., தாழையடி.

## விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு



நாவலப்பிட்டியைச் சேர்ந்த, தர்மலிங்கம்-மேரி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வி, அனோஷனி டிஷாணி தனது ஆறாவது பிறந்த நாளை 20.08.2008 அன்று தனது இல்லத்தில் வெகுவிமர்சையாகக் கொண்டாடினார். இவரை குடும்பத்தினர் அனைவரும் இயேசுவின் அருளால் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.



புத்தளம், தில்லையடியைச் சேர்ந்த, லத்தீப்-சித்தி றம்ஸியா பேகம் தம்பதிகளின் செல்வப் புதல்வி, ஃபாத்திமா நளீபா தனது பத்தாவது பிறந்த நாளை 21.08.2008 அன்று தனது இல்லத்தில் கொண்டாடினார். இவரை சவூதி அரேபியாவில் இருக்கும் உம்மா, வாப்பா உட்பட குடும்பத்தினர் அனைவரும் அல்லாஹ்வின் கிருபையால் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்-எல்.ஃபாத்திமா)



அண்மையில் இருதயபுரம், தேவநாயக மண்டபத்தில் நடைபெற்ற கலை நிகழ்வின்போது, பே.மோனிஷா பரதநாட்டியம் ஆடுவதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන்
# ஆயுபோவன்
# வணக்கம்

இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மகளுக்கும் இடையில் இடம்பெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

கலாபூஷணம் கே.என்.டி.பீரிஸ்

දුව: අම්මේ මගේ නහය රිදෙනවා.
அம்மே மகே நஹய ரிதெனவா.
மகள்: அம்மா எனது மூக்கு நோகுது.

අම්මා: මෙහේ එන්න නහය බලන්න.
மெஹே என்ன, நஹய பளன்ன.
அம்மா: இங்கே வா, மூக்கைப் பார்ப்போம்.

නහය කොහේද රිදෙන්නේ ?
நஹய கொஹேத ரிதென்னே?
மூக்கு எங்கே நோகிறது?



දුව: නහය ඇතුළේ රිදෙනවා.
நஹய எதுளே ரிதெனவா.
மகள்: மூக்கின் உள்ளே நோகிறது.

අම්මා: නහය සූරන්න.
நஹய சூறன்ன.
அம்மா: மூக்கை சீறு.

තදින් සූරන්න.
ததின் சூறன்ன.
பலமாக சீறு.

දුව: නහය රිදෙනවා අම්මේ.
நஹய ரிதெனவா அம்மே.
மகள்: மூக்கு நோகுது அம்மா.

අම්මා: නහයේ සෙම තියෙනවා.
நஹயே செம தியெனவா.
அம்மா: மூக்கில் சளி இருக்கிறது.



නහය රතුවෙලා.
நஹய றதுவெளா.
மூக்கு சிவந்து இருக்கு.

නහයේ ගෙඩියක් තියෙනවා.
நஹயே கெடியக் தியெனவா.
மூக்கில் ஒரு கட்டி இருக்கிறது.

අම්මා: අපි දොස්තර මහතාට නහය පෙන්නමු.
அபி தொஸ்தர மஹதாட நஹய பென்னமு.
அம்மா: நாம் வைத்தியரிடம் மூக்கைக் காட்டுவோம்.

දුව: හොඳයි අම්මේ.
ஹொந்தய் அம்மே.
மகள்: நல்லது அம்மா.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழி பெயர்க்க.**

உதா: அம்மா எனது மூக்கு நோகிறது.
අම්මේ මගේ නහය රිදෙනවා.

i மூக்கு எங்கே நோகிறது?
..........................................................

ii மூக்கில் சளி இருக்கிறது.
..........................................................

iii மூக்கில் ஒரு கட்டி இருக்கிறது.
..........................................................






**Can** எனும் எதிரிடை துணை வினைச் சொல்லை (Modal Auxiliary Verb) மூலவினைச் சொல்லுடன் (Stem Verb) கையாண்டு அமைக்கப்பட்ட 'வினா' வாக்கியம், 'உடன்பாடு' வாக்கியம் மற்றும் 'எதிர்மறை' வாக்கியம் என்பவற்றை மேலும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

He, She, It முதலான பிரதிப்பெயர்ச் சொற்களை (Pronouns) எழுவாய் பகுதியில் கையாண்டு, அமைக்கப்பட்ட வாக்கியங்களை இங்கே அவதானிப்போம்.

(அ) Can he play?
அவனால் விளையாட முடியுமா? (வினா வாக்கியம்)

(ஆ) Yes, he can play.
ஆம், அவனால் விளையாட முடியும். (உடன்பாடு வாக்கியம்)

(இ) No, he can not play.
இல்லை, அவனால் விளையாட முடியாது. (எதிர்மறை வாக்கியம்)

---

(அ) Can she pay?
அவளால் செலுத்த முடியுமா? (வினா வாக்கியம்)

(ஆ) Yes, She can pay.
ஆம், அவளால் செலுத்த முடியும். (உடன்பாடு வாக்கியம்)

(இ) No, She can not pay.
இல்லை, அவளால் செலுத்த முடியாது. (எதிர்மறை வாக்கியம்)

(அ) Can it fly?
அதற்கு பறக்க முடியுமா? (வினா வாக்கியம்)

(ஆ) Yes, it can fly.
ஆம், அதற்குப் பறக்க முடியும். (உடன்பாடு வாக்கியம்)

(இ) No, it can not fly.
இல்லை, அதற்குப் பறக்க முடியாது. (எதிர்மறை வாக்கியம்)

**மேற்படி வாக்கியங்கள் செயற்படுபொருள் (Object) சகிதம் பின்வருமாறு அமைகின்றன.**

(அ) Can he play cricket?
அவனால் கிரிக்கெட் விளையாட முடியுமா? (வினா)

(அ) Yes, he can play cricket.
ஆம், அவனால் கிரிக்கெட் விளையாட முடியும். (உடன்பாடு)

(இ) No, he can not play cricket.
இல்லை, அவனால் கிரிக்கெட் விளையாட முடியாது. (எதிர்மறை)

---

(அ) Can she pay that money?
அவளால் அந்தப் பணத்தை செலுத்த முடியுமா? (வினா)

(ஆ) Yes, she can pay that money.
ஆம், அவளால் அந்தப் பணத்தை செலுத்த முடியும். (உடன்பாடு)

(இ) No, she can not pay that money.
இல்லை, அவளால் அந்தப் பணத்தை செலுத்த முடியாது. (எதிர்மறை)

---

(அ) Can it fly over that tree?
அதற்கு அந்த மரத்தின் மேலாகப் பறக்க முடியுமா? (வினா)

(ஆ) Yes, it can fly over that tree.
ஆம், அதற்கு அந்த மரத்தின் மேலாகப் பறக்க முடியும். (உடன்பாடு)

(இ) No, it can not fly over that tree.
இல்லை, அதற்கு அந்த மரத்தின் மேலாகப் பறக்க முடியாது. (எதிர்மறை)

**(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்லஸ்



இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடை அளிப்போரில் மூவருக்குத் தலா ரூ.150/= பெறுமதியான 'அற்லஸ்' பாடசாலை உபகரணங்களை வாங்கக் கூடிய பண வவுச்சர்களைப் பரிசாக சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்) வழங்கும்.

## அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...



# முஷாரஃபின் பதவி விலகல்; மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம்

பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரஃப் தனது பதவியிலிருந்து விலகியதையடுத்து, பாகிஸ்தான் நாடாளுமன்ற செனட் சபையின் தலைவர் மொஹமட் மியன் சுன்ரோ இடைக்கால ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். அந்நாட்டு அரசியலமைப்பின்படி ஜனாதிபதி பதவி வெற்றிடமாகும் சந்தர்ப்பத்தில் செனட் சபையின் தலைவரே இடைக்கால ஜனாதிபதியாக நியமிக்கப்படுவார்.

முஷாரஃப் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அதிகாரங்களை தவறான வழிமுறையில் கையாண்டதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தார்.

முஷாரஃப் ஜனாதிபதியாக இருந்த போதிலும் அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்கட்சியே ஆட்சி அமைத்தது. அதற்கமைய முஷாரஃப் மீது நாடாளுமன்றத்தில் கண்டனத் தீர்மானமொன்றை கொண்டு வருவதற்கு ஆட்சியாளர்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். இத்தகைய பின்னணியிலேயே அதற்கு முன்னதாக முஷாரஃப் ஜனாதிபதி பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்திருந்தார்.

இராணுவத் தளபதியாக இருந்த முஷாரஃப் 1999 ஆம் ஆண்டில் ஆட்சி புரிந்த நவாப் ஷெரிப்பின் ஆட்சியை இராணுவ ரீதியில் கைப்பற்றினார். அன்று தொடக்கம் முஷாரஃப் ஆட்சி அதிகாரத்தை நடத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது.

முஷாரஃப் பதவி விலகுவதாக அறிவித்ததையடுத்து அந்நாட்டின் ஆளுங்கட்சி ஆதரவாளர்கள் மகிழ்ச்சி ஆரவாரத்தில் ஈடுபட்டனர்.



## சாவேஸின் ஆதரவு

ரஷ்ய இராணுவம் ஜோர்ஜியா மீது மேற்கொண்ட தாக்குதல்களுக்கு தமது ஆதரவினை ரஷ்யாவிற்கு வெனிசுவெலா ஜனாதிபதி ஹியுகோ சாவேஸ் தெரிவித்துள்ளார்.

வலுவடைந்து வருகின்ற ரஷ்யாவை பலமிழக்கச் செய்யும் நோக்கிலான அமெரிக்காவின் திட்டத்திற்கு துணை போகின்ற ஜோர்ஜியா மீது ரஷ்யா தாக்குதல்களை நடத்தியமை சரியானதே என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சந்தர்ப்பத்திற்கேற்ற வகையில் ரஷ்யா நடந்து கொண்ட விதத்தையிட்டு மகிழ்ச்சியை தெரிவித்துள்ள சாவோஸ் அதற்காக ரஷ்ய ஜனாதிபதி திமித்ரி மெடிடெடெப்பை பாராட்டியும் உள்ளார்.




## முகாபே இணக்கம்

எதிர்க்கட்சியுடன் ஆட்சி அதிகாரங்களை பகிர்ந்து கொள்வதற்கு சிம்பாப்வே ஜனாதிபதி ரொபர்ட் முகாபே சம்மதம் தெரிவித்துள்ளார். தென் ஆபிரிக்க ஜனாதிபதி காபோ எம்பக்கியே இக்கருத்தினை ஊடகங்களுக்கு வெளிப்படுத்தியுள்ளார்.

சிம்பாப்வே ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்குமிடையே நிலவி வந்த அதிகாரப் போட்டியை முடிவிற்கு கொண்டு வரும் நோக்கில் தென் ஆபிரிக்க ஜனாதிபதி சமாதான முயற்சிகளை மேற்கொண்டு ஜனாதிபதி முகாபேயுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தார். அதன் பிரதிபலனாகவே ஜனாதிபதி முகாபே இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளார்.

கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் போட்டியின்றி முகாபே தெரிவாகியிருந்தார். இந்நிலையினை உலக நாடுகள் பல விமர்சித்திருந்தன. இத்தேர்தலின் போது எதிர்க்கட்சியினருக்கு எதிராக முகாபேயின் ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தியமையால், எதிர்க்கட்சி வேட்பாளரான மோர்கன் போட்டியிலிருந்து விலகினார். இதனையடுத்தே இரண்டு தரப்பாருக்குமிடையிலான அரசியல் குரோதம் இன்னும் அதிகரித்தது.

இந்நிலையில் முகாபேயுடன் தென் ஆபிரிக்க ஜனாதிபதி மேற்கொண்டுள்ள தொடர்புகளின் பெறுபேறாக அங்கு இயல்பு நிலை மேம்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## 139 ஆவது வயதில் மரணம்

இந்தியாவின் வயது முதிர்ந்த மனிதர் என்று கருதப்படும் ஹபீப் மியான் கடந்த வாரம் செவ்வாய்க்கிழமையன்று தனது 139 ஆவது வயதில் காலமானார்.

1870 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆம் திகதி ராஜஸ்தானில் பிறந்த இவர் 'ஜெய்பூர் ரோயல்பெமிலி' என்னும் நிறுவனத்தில் 'கிளாரினட்' கலைஞராக சேர்ந்து 1938 ஆம் ஆண்டு தனது 68 ஆவது வயதில் ஓய்வு பெற்றார். அச்சமயத்தில் இவர் ஒரு ரூபா 46



சதத்தையே தனது ஓய்வூதியமாகப் பெற்றார். பின்னாளில் இத்தொகை 2,698 ரூபாவாக உயர்ந்தது.

ஹபீப் மியான் இவ்வருடம் தனது பிறந்தநாளைக் கொண்டாடவில்லை. ஏனெனில், ஜெய்பூரில் மே 13 ஆம் திகதி 62 பேரை பலி கொண்ட தொடர்குண்டு வெடிப்புக்கள் இவர் உள்ளத்தை துயரமடையச் செய்துவிட்டது என்று இவரின் பேரன் சுட்டான் கான் தெரிவித்தார்.

இவருடைய மரணம் பற்றி இவரின் குடும்ப நண்பர் ராஜேஸ் நாக்பால் தெரிவிக்கையில், ''இந்த முதியவர் நேற்று என்னை அழைத்து, எனது நேரம் வந்து விட்டது. இந்நேரத்தில் என்னை விட்டுப் போய்விடாதீர்கள்'' என்று கூறியதாக தெரிவித்தார்.

இவருடைய பேரன்மார்களான சுட்டான் மியானும் மஹ்மூத் மியானும் இவருக்கு 140 பேரப் பிள்ளைகள் இருப்பதாகத் தெரிவித்தனர். இவருடைய மனைவியும் நான்கு மகன்மாரும் பல வருடங்களுக்கு முன்னரே இறந்து விட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர். ஜெய்ப்பூரில் இவரே வயது முதிர்ந்த மனிதர் என்று 'லிம்கா' சாதனையில் 2005 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## அற்லஸ் கேள்வி - 166

**கேள்வி:** பாகிஸ்தானின் இடைக்கால ஜனாதிபதியின் பெயர் என்ன?

**சரியான விடை**........................................

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 166,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

### போட்டி இல - 164 இன் சரியான விடை: பிலிப்பைன்ஸ்

**பரிசு பெறுவோர்**


பாத்திமா இஸ்மா,
அனீஸா மன்ஸில்,
அந்தெனிய, பதுளை.

பாத்திமா ஸப்ரினா நசீர்,
327, இரத்தினபுரி வீதி, பலாங்கொடை.

எம்.ஹரிபிரசன்னா,
1, சேர்கியுலர் வீதி, ஹட்டன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சனத்தொகையில் 4% மானோர் இடது கைப்பழக்கமுடையவர்கள்



எம்மில் அநேகமானோர் தமது வலது கையைப் பயன்படுத்தியே அன்றாட கருமங்களை ஆற்றுகின்றனர். சிறுவயதிலிருந்தே நாம் எந்தவொரு வேலையைச் செய்ய முற்படும் போதும் வலதையே பின்பற்ற வேண்டும் என எமது மூத்தோர்கள் கூட எமக்கு அறிவுரை வழங்குகின்றனர். எனினும், எம்மில் சிலர் பிறவியிலேயே தமது வேலைகளைச் செய்வதற்கு பெரும்பாலும் இடது கையைப் பயன்படுத்துவதை நாம் கண்டிருக்கிறோம். உலக சனத்தொகையில் இடது கைப் பழக்கமுடையவர்களின் மொத்த எண்ணிக்கை 4% ஆக இருக்கின்றதாம். அதாவது ஏறக்குறைய 26 கோடியே 40 இலட்சமாகும் எனக் கணக்கெடுப் பொன்று தெரிவிக்கின்றது.

எனினும், சில பெற்றோர் இவ்வாறு பிறவியிலேயே இடது கைப்பழக்க முடையவர்களாய் இருக்கும் தமது பிள்ளைகளை வலுக்கட்டாயப்படுத்தி வலது கைப்பழக்கமுடையவர்களாக மாற்ற முனைகின்றனர். இன்னும் சிலர், தமது பிள்ளைகள் இடது கைப் பழக்கமுடையவர்களாய் இருப்பதை விரும்புவதில்லை. அத்துடன் இடது கைப்பழக்கமுடையவர்களாய் இருப்பது கூடாது என்று சிலரிடையே பரவி வருகின்ற மூடநம்பிக்கையும் இதற்குக் காரணமாகும். எனினும், மனோவியல் வைத்திய நிபுணர்களோ இடது கைக்காரர்களின் இப்பழக்கத்தை வலுக்கட்டாயமாக மாற்றுவது கூடாது எனக் கூறுகின்றனர்.

அதன்படி, ஒகஸ்ட் 13 ஆம் திகதி சர்வதேச இடது கைப்பழக்கமுடையவர்கள் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஏன் இவர்களுக்கென ஒரு தினம் என நீங்கள் யோசித்திருக்கக்கூடும். நாம் மேற்சொன்னது போன்ற சில மூடநம்பிக்கைகள் காரணமாக ஒரு காலகட்டத்தில் சமூகத்தில் இடது கைப்பழக்க முடையவர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். இந்த மூடநம்பிக்கையை இல்லாதொழிக்கவே ஒவ்வொரு வருடமும் ஒகஸ்ட் 13 ஆம் திகதி 'சர்வதேச இடது கைப்பழக்க முடையவர்கள் தினம்' என ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப் படுத்தியது. தவிர, உலகின் பல நாடுகளிலுள்ள இடது கைக்காரர் களும் தமக்கென தனியான அமைப்புகளையும் ஏற்படுத்தலாயினர். இலங்கையிலும் இடது கைக்காரர்களுக்கென தனியான அமைப்புகள் இயங்குகின்றன.




மானிட வரலாற்றை ஆய்வு செய்து பார்த்தால், இதுவரை உலகில் தோன்றிய புகழ் வாய்ந்தவர்கள் பலர் இடது கைப் பழக்கமுடையவர்களாகவே விளங்குகின்றனர். உலகப் பிரசித்தி பெற்ற ஓவியக் கலைஞர்களான லியனாடோ டாவின்சி, மைக்கல் ஏஞ்சலோ போன்றோர் காலத்தால் அழியாத அற்புதமான ஓவியங்களைத் தீட்டியதும் சிற்பங்களைச் செதுக்கியதும் அவர்களின் இடது கைகளாலேயே ஆகும்.தவிர, ரொனால்ட் ரேகன் (அமெரிக்கா), ஜோர்ஜ் டபிள்யூ புஷ் (அமெரிக்கா), பில் க்ளிண்டன் (அமெரிக்கா), மா மன்னர் அலெக்ஸாண்டர், ஜூலியஸ் சீஸர், பேரரசன் நெப்போலியன் பொனபார்ட், விக்டோரியா மகாராணி, ஃபிடெல் கெஸ்ட்ரோ (முன்னாள் கியூபா ஜனாதிபதி), ஜோன் எஃப் கென்னடி போன்ற உலகின் பிரபலமான சில அரசியல் தலைவர்களும் இடது கைப்பழக்கமுடையவர்களே. அது மாத்திரமன்றி, விளையாட்டு, எழுத்துத்துறை என மேலும் பல துறைகளிலும் இடது கைப்பழகமுடையவர்கள் மிளிர்ந்து கொண்டிருக்கின்றனர்.

இந்த வகையில், ஒரு பிள்ளை இடது கைக்காரராக வருவதற்குரிய காரணம் என்ன? என்ற வினா எம்மில் எழுவது இயற்கையே. நாம் நமது சரீரத்தின் செயற்பாடுகளை சிறிது அவதானித்தோமானால், நமது சரீரத்தின் வலது பகுதிக்கும் இடது பகுதிக்கும் இடையில் சிறியதொரு வித்தியாசம் இருப்பதை உணர்ந்து கொள்ளலாம்.

பொதுவாக, எமது மூளை கூட இடது-வலது என இரு பிரிவுகளாக உருவாக்கப்பட்டுள்ளது. இந்த இரு பகுதிகளினதும் செயற்பாடுகளும் ஒன்றுக்கொன்று வித்தியாசமானவையே. மூளையின் வலது பகுதி, எமது உடலின் இடது பக்கப் பிரிவையும் மூளையின் இடது பகுதி எமது உடலின் வலது பக்கப் பிரிவையும் கட்டுப்படுத்துவதோடு செயற்படவும் செய்கின்றது. இவ்வாறே, மூளையின் நரம்புத் தொகுதியும் இரண்டாகப் பிரிந்துள்ளது. மூளையின் வலது பிரிவு அதிக செயற்பாடுடையவர்கள் இடது கைக்காரர்களாகவும் மூளையின் இடது பிரிவு அதிக செயற்பாடுடையவர்கள் வலது கைக்காரர்களாகவும் திகழ்கின்றனர்.

**மனோவியல் வைத்திய நிபுணர்களோ இடது கைக்காரர்களின் இப்பழக்கத்தை வலுக்கட்டாயமாக மாற்றுவது கூடாது எனக் கூறுகின்றனர்**



எனவே, உங்களில் எவரும் நாம் இடது கைக்காரர்களாக பிறந்து விட்டோமே என்று கவலை கொள்ளத் தேவையில்லை. மாறாக, நாம் இடது கைக்காரர்களே என்று பெருமையாக சொல்லலாம். இடது கைக்காரர்களாக இருப்பது குறைபாடல்ல.



# குதிரை சக்தி என்பது.....



மனித குல வரலாற்றின் தொடக்க காலத்தில், மோட்டார் வாகனங்கள் கண்டுபிடிக்கப் படாத நிலையில், மனிதனின் வேக வாகனம் குதிரைதான். இதனையடுத்தே படிப்படியாக சக்கரம், வாகனம் எல்லாம் கண்டுபிடிக்கப்பட்டன. இன்றளவில் இயந்திரங்கள், மின் கலங்கள், ரயில் எஞ்சின், மோட்டார் வாகனங்கள் ஆகியவற்றின் இழுப்பு விசை அலகாகவும் குதிரை சக்தி எனும் பதம் பயன்படுவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஒரு குதிரை சக்தி என்பது 746 வோட் என்று குறிப்பிடப்படுகின்றது.

'குதிரை சக்தி' என்னும் சொற்றொடர் முதன்முதலில் நீராவி எஞ்சினின் இழுப்பு விசையை அளவிடப் பயன் படுத்தப்பட்டது. இச்சொற்றொடரை முதலில் பயன்படுத்தியவர் ஜேம்ஸ் வோட் என்ற ஸ்கொட்லாந்து நாட்டுப் பொறியியல் அறிஞர். எனவே, புராதன காலத்தில் விரைந்து செல்ல மனிதனுக்குப் பயன்பட்ட விலங்கின் பெயரையே வாகன இழுப்பு விசையைக் குறிக்கவும் பயன்படுத்தியிருக்கிறார்கள் நம் முன்னோர்கள்.



# 'மெலனின்'தான் காரணம்

மெலனின் என்னும் வார்த்தை கிரேக்கச் சொல்லில் இருந்து வந்தது. இதற்கு கிரேக்க மொழியில் 'கறுப்பு' என்று அர்த்தம்.

நமது தோல், தலைமுடி, கண் ஆகியவற்றில் மெலனின் என்னும் பழுப்பு நிறப் பொருள் உள்ளது. இந்த மெலனின் ஒவ்வொருவருக்கும் மாறுபட்ட அளவில் இருக்கும். மெலனின் அதிகமாக இருப்பவர்களின் உடல் நிறமும் முடியும் கறுப்பாக இருக்கும்.

மெலனின் உருவாக்கும் செல்கள் 'மெலனோசைட்ஸ்' என்று அழைக்கப்படும். எமது உடலில் சுரக்கும் மெலனின்தான் சூரியனில் இருந்து வரும் அளவுக்கு அதிகமான புற ஊதாக் கதிர்களை எமது உடலினுள் புகாமல் பாதுகாக்கின்றது. அப்படிப் பாதுகாக்கும் போது நம் தோல் ஆழத்தை பாதிக்காமல் இருக்கச் செய்ய, மெலனின் அதிகமாகச் சுரக்கின்றது. புற ஊதாக் கதிர்களினால் தோல் புற்றுநோய் வருவதற்கான சாத்தியக்கூறுகள் மிக அதிகம். இது வராமல் தடுப்பதும் இந்த மெலனின்தான்.

சூரிய ஒளி 'மெலனோசைட்ஸ்' செல்களின் உற்பத்தியை அதிகரிக்கின்றது. இதனால்தான், குளிர் பிரதேசங்களில் வசிப்பவர்களை விட வெப்பமான பிரதேசங்களில் வசிப்பவர்கள் கறுப்பாக இருக்கிறார்கள். சிலருக்கு ஏதாவது சில காரணங்களால் மெலனின் உருவாவதில்லை. இது 'எல்பினிஸ்ம்' எனப்படுகின்றது. இவர்களை 'எல்பினோ' என்பார்கள். இது இவர்களின் உடலில் பகுதியாகவோ, முழுமையாகவோ இருக்கலாம். முழுமையான 'எல்பினோ' கொண்டவர்களின் உடல், மங்கிய இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும். இவர்களது தலைமுடி வெள்ளை நிறமாகவும் கண்ணின் கருவிழி நிற மற்றும் காணப்படும்.

ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலை செய்து கொண்ட யுவதியின் ஆவி?



'பஞ்சிங்' அடிப்பது எப்படியென்று முதலாளி நன்கு சொல்லிக் கொடுத்திருந்தபடியால் இனிக் கடமையை ஒழுங்காகச் செய்து நற்பெயர் பெற வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்ட விமல் அன்றைய தினம் நன்கு உறங்கித் தன்னை தயார்படுத்திக் கொண்டான். எழுந்து முகம் அலம்பி உடை மாற்றிக் கொண்டு கடமைக்குத் தயாரானான். ஒப்பரேட்டர் மாதவனைச் சந்திப்பதற்காக கெபினுக்குச் சென்றான். அங்கே... மாதவனைக் காணவில்லை. வேறு ஒருவர் படம் ஓட்டிக் கொண்டிருந்தார்.

அவர் அவனிடம், ''என்ன தம்பி?'' என்று கேட்டதும் ''மாதவன் அண்ணன் இல்லையா?'' என்று கேட்டான்.

''இல்லை தம்பி, அவர் ஏதோ அவசர வேலை இருப்பதாகக் கூறிவிட்டு நேரத்தோடு போய்விட்டார்'' என்று கூறினார். பின்னர், ''ஏன், என்ன விசயம்?'' என்று கேட்டவரிடம் ''ஒன்றுமில்லை சும்மாதான்'' என்றவனிடம் ''தம்பி உங்கள் பெயர் என்ன?'' என்று அவர் கேட்டார்.

''விமல்'' என்று அவன் கூறியதும், ''உங்களுக்கு இங்கு வேலை பிடித்திருக்கிறதா?'' என்று கேட்டார்.

''ஓ.... நன்றாகப் பிடித்திருக்கிறது'' என்று கூறினான். பின்னர் மாதவனுடன் நட்புக் கொண்டிருப்பது போல இவருடனும் பழகிக் கொள்ளவேண்டும் என்று நினைத்தவன், ''ஏன் அப்படிக் கேட்டீர்கள்?'' என்று கேட்டான்.

''இல்லை, இங்கு வருபவர்கள் யாரும் நிலைத்து நிற்பதில்லை'' என்று கூறியவரிடம் ''அப்படியா? ஏன் அப்படி?'' என்று கேட்டான். அவர் அதற்குப் பதில் சொல்ல ஆரம்பித்ததும் தான் ஏன் இவரிடம் அப்படிக் கேட்டோம் என்று தோன்றியது விமலுக்கு. ஏனென்றால் அவர் ஒரேயடியாக தியேட்டரை தாக்கிப் பேசத் தொடங்கிவிட்டார். அவர் சொன்னார்.

''பிறகு என்ன தம்பி, ஓட்டை உடைசல் போல் தியேட்டரை வைத்திருந்தால் யாருக்குத்தான் இங்கு வேலை செய்யப் பிடிக்கும். நீங்கள் எவ்வளவு சின்னப் பையன். உங்களைப் போய் இரவு காவல் வேலைக்குப் போட்டிருக்கிறாரே முதலாளி. பாவம் உங்களுக்கு ஏதாவது நடந்தால் உங்கள் பெற்றோருக்கு என்ன பதில் சொல்லுவார்?''

விமல், மீது அனுதாபப்படுவது போல் அவர் பொரிந்து தள்ளிக் கொண்டிருந்தார். விமலுக்கு இவரிடம் ஏன் பேசினோம் என்று எரிச்சலாக இருந்தது. முதலாளியோடு அவருக்கு வேறு ஏதோ கோபம் இருக்கவேண்டும் என்று நினைத்த விமல் அங்கிருந்து போனால் போதும் என்ற நினைப்பில் போகத் தயாரானான்.ஆனாலும்,அவர் விடுவதாக இல்லை. தொடர்ந்தார்... ''என்ன விமல்? உங்களுக்கு இங்கு தனியாக இரவு காவல் வேலை செய்யப் பயமாக இல்லையா?'' என்று கேட்டார்.

''அவரிடமிருந்து எப்படியாவது விடுபட்டுச் சென்றால் போதும்'' என்ற எண்ணத்தில் விமல் சொன்னான்.

''சேச்சே..., எனக்குப் பயம் என்பதே இல்லை. நான் இரவில் தனியாக எங்கு வேண்டுமானாலும் போவேன்'' என்று கூறிவிட்டு போகத் தயாரானவனிடம் அவர் ''அப்படியானால் உங்களுக்குப் பொருத்தமான இடம்தான் இது'' என்று கூறியவரிடம் விமல் தவறுதலாக ''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?'' என்று கேட்டுவிட்டான். அவ்வளவுதான் அவர் சொல்ல ஆரம்பித்துவிட்டார்.

''வந்து தம்பி, இந்தத் தியேட்டரில் மோகினி உலாவுவதாகப் பேசிக் கொள்கிறார்கள் என்று அவர் கூறியதும் விமலுக்கு அடிவயிற்றில் புளியைக் கரைப்பது போல் இருந்தது. அன்று தியேட்டருக்குள் தான் கண்டது மோகினிப் பேய்தான் என்று மனதுக்குள் உறுதி செய்து கொண்டான். அவனுக்குப் பேச்சுவர மறுத்தது. எதுவும் பேசாமல் மௌனமாக இருந்தான். ஆனால், அவரோ விடுவதாக இல்லை. தொடர்ந்து கொண்டே இருந்தார்.

''தியேட்டருக்குப் பின்னால் பெரிய மாமரம் ஒன்று இருக்கிறதல்லவா? அதில் சில மாதங்களுக்கு முன் ஒரு இளம் பெண் தூக்குப் போட்டுக் கொண்டு இறந்துவிட்டாள். அவளுடைய ஆவிதான் மோகினியாக அலைகிறதாம்'' என்று கூறினார்.

விமலுக்கு அவருடைய அந்தப் பேச்சை எப்படியாவது நிறுத்தினால் போதும் என்று இருந்தது. அதனால், அவன் சொன்னான். ''இதெல்லாம் கட்டுக்கதை அண்ணன். இதையெல்லாம் நம்பாதீர்கள். பேய், பிசாசு என்பதெல்லாம் வெறும் பொய்'' என்று கூறி பேச்சை திசை திருப்ப முயற்சித்தான். இவர் மாதவனைப் போன்றவர் அல்ல. வெட்டிப் பேச்சும் ஊர் வம்பும் பேசுபவர் என்று புரிந்து கொண்டான். அத்தோடு இவர் நல்ல மனிதராகவும் இருக்க முடியாது. நல்லவராக இருந்தால் நான் இங்கு தனிமையில் இரவு காவல் வேலை செய்வது தெரிந்திருந்தும் இப்படிப் பயமுறுத்தும் பேச்சுப் பேசுவாரா? என்று நினைத்தவன் அங்கிருந்து போக நினைக்கையில் அவர் மீண்டும் பேச்சைத் தொடர்ந்தார்.




''நீங்கள் தைரியசாலியாக இருப்பதைப் பார்க்கையில் சந்தோஷமாக இருக்கிறது விமல். இருந்தாலும் தியேட்டருக்குப் பின்னால் இருக்கும் மாமரத்துப் பக்கம் மட்டும் போய் விடாதீர்கள்'' என்று தனக்கு நல்லது சொல்வது போல சொன்னார். இன்று மாமரத்தைக் கடந்து போய்த்தான் 'பஞ்சிங்' அடிக்க வேண்டி இருக்கிறது. அதை இவரிடம் சொன்னால் வேறு வினையே தேவை இல்லை என்று நினைத்துக் கொண்டவன் அதைச் சொல்லாமல் இருந்தான்.

அந்த மாமரம் மற்றும் ஆலமரம் என்பன தியேட்டர் சுற்று மதிலுக்கு வெளியில்தான் இருந்தன. அத்தோடு அந்தப் பக்கம் ஒரு பாழடைந்த வீடும் இருப்பதை விமல் பகல் நேரங்களில் கவனித்திருக்கிறான். இரவு பத்து மணியிலிருந்து அதிகாலை ஐந்து மணி வரை ஒவ்வொரு மணித்தியாலமும் 'பஞ்சிங்' செய்ய வேண்டும் என்று முதலாளி அவனிடம் கூறி இருந்தார். தியேட்டருக்குள் இருக்கவே பயந்தவன் இன்று எப்படி தியேட்டருக்குப் பின்னால் போய் 'பஞ்சிங்' செய்வது என்று நினைத்து மிகவும் பயந்தான். அவன் முகத்தில் ஏற்பட்ட மாறுதலை அவர் கவனித்திருக்கவேண்டும். அவர் சொன்னார்.

**தியேட்டருக்குப் பின்னால் இருக்கும் பெரிய மாமரத்தில் சில மாதங்களுக்கு முன் இளம்பெண் ஒருத்தி தூக்குப் போட்டுத் தற்கொலை செய்துகொண்டாள். அவளின் ஆவிதான் மோகினியாக உலாவுகிறது என்பதைக் கேட்டு விமல் உள்ளூர நடுக்கமுற்றான்.**

''விமல், நான் இப்படிச் சொன்னேன் என்பதற்காக நீங்கள் தைரியத்தை இழந்துவிடாதீர்கள். பாவம்... சந்தோஷமாக வாழவேண்டிய வயதில் இப்படி ஒரு நரகத்தில் வந்து சிக்கிக் கொண்டு இருக்கிறீர்களே'' என்று அவன் மீது அனுதாபப்படுவது போல் பேசினார். அவர் எவ்வளவு மோசமான மனிதராக இருக்கும் என்று விமலுக்குப் புரிந்தது. வேறு நேரமாக இருந்தால் அவனுக்கு வரும் கோபத்தில் வாய்க்கு வந்தபடி திட்டியிருப்பான். இங்கு அப்படி நடந்து கொள்ள முடியாதே என்று பொறுமையாக இருந்தான். வீட்டை விட்டு வந்துவிட்டதால் இனி இப்படிப் பல்வேறுவிதமான மனிதர்களை சந்திக்க வேண்டியிருக்கும் என்று நினைத்தவன் நேரம் இரவு பத்து மணியை நெருங்கிக் கொண்டு இருந்ததால் அவரிடம் ஒருவாறு விடைபெற்றுக் கொண்டு 'கெபினை' விட்டு வெளியில் வந்தான்.

'டோர்ச் லைட்டை' எடுத்துக் கொண்டு கடமைக்குத் தயாரானான். இரவுக் காட்சி ஓடிக்கொண்டு இருந்ததால் தியேட்டருக்குள் ஒரே சிரிப்பும் பேச்சும் கலகலப்புமாக இருந்தது. பத்து மணி ஆனபோது போய் 'பஞ்சிங்' அடிக்கப் போனான். அப்போது அவர் சொன்னது போல் அந்த மாமரத்தைப் பார்க்கையில் அவனுக்கு மிகப் பயமாக இருந்தது. இருந்தாலும் அவ்வேளையில் தியேட்டரில் ஆட்கள் இருந்தபடியால் தைரியமாகப் போனான்.

(தொடரும்....)

## தாயின் அறிவுரை

ஓர் ஊரில் முத்துப்பாண்டி, கௌதம் என்ற இரு நண்பர்கள் இருந்தனர். கௌதமை யார் எப்படி எரிச்சல் ஊட்டினாலும் அவனுக்குக் கோபமே வராது. சிரித்துக் கொண்டே அங்கிருந்து சென்றுவிடுவான். நண்பன் முத்துப்பாண்டி அவனிடம், ''எனக்கு அடிக்கடி கோபம் வருகிறது. பிறகுதான் ஒன்றுமில்லாததற்கு ஏன் இப்படிக் கோபப்பட்டேன் என்று வருந்துவேன். எது நடந்தாலும் கோபமே கொள்ளாத உன்னைப் பார்க்கும்போது எனக்குப் பொறாமையாக இருக்கிறது. உன்னால் மட்டும் இது எப்படி முடிகிறது?'' என்று கேட்டான். அதற்கு கௌதம், ''நான் சிறுவனாக இருந்தபொழுது எடுத்ததற்கெல்லாம் கோபப்படுவேன். எரிந்து விழுவேன். என் நிலையைப் பார்த்து என் தாய் எனக்கு அறிவுரை கூறினார் அந்த அறிவுரைதான் என்னை மாற்றியது'' என்றான்.




''என்ன அறிவுரை?'' எனக் கேட்டான் நண்பன் முத்துப்பாண்டி.

''யாரெல்லாம் உன்னைக் கோபம் கொள்ள வைக்கின்றார்களோ அவர்கள் உண்மையில் உன்னை வென்றவர்கள் ஆகிறார்கள். நீ மட்டும் கோபம் கொள்ளாமல் இருந்தால் அவர்களை நீ வென்றவன் ஆவாய் என்றார். ஒவ்வொரு முறையும் என்னைப் பிறர் கோபமூட்ட முயலும் போது நான் அவர்களை வென்ற பெருமிதத்தில் சிரித்துக் கொண்டே இருந்து விடுகிறேன். இதனால், எனக்குக் கோபமே வருவதில்லை'' என்று விளக்கம் கூறினான் கௌதம். நண்பன் சொன்னதைக் கேட்டதில் இருந்து முத்துப்பாண்டியின் மனமும் மாறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# தங்க மகன் பெல்ப்ஸ்

அமெரிக்காவின் நீச்சல் வீரர் மைக்கல் பெல்ப்ஸ் இம்முறை பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் 'தங்க மகன்' என்ற பெருமையைப் பெறும் அளவிற்கு எட்டு தங்கப் பதக்கங்களைப் பெற்று சாதனை நிகழ்த்தியுள்ளமையானது இன்னொருவரால் முறியடிக்கப்படக்கூடிய சாதனையாக இருக்குமா? என்ற கேள்வியை தற்போது எழுப்பியுள்ளது. அத்துடன், ஒலிம்பிக் வரலாற்றில் ஒட்டு மொத்தமாக அதிக எண்ணிக்கையிலான தங்கப்பதக்கங்களை வெற்றியீட்டியவர் என்ற பெருமையை பெல்ப்ஸ் பெற்றுள்ளமை கூட முறியடிக்க முடியாத சாதனையாக நீண்ட காலத்திற்குத் திகழும் என்று கூறப்படுகின்றது. பெல்ப்ஸ் இதுவரை மொத்தமாக ஒலிம்பிக் போட்டிகளில் 14 தங்கப்பதக்கங்களை பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.



1972 ஆம் ஆண்டு 'மியுனிச்' ஒலிம்பிக் போட்டியில் மார்க் ஸ்பிட்ஸ் என்ற வீரர் ஒரே ஒலிம்பிக் போட்டியில் ஏழு தங்கப்பதக்கங்களைப் பெற்று முன்னைய சாதனையை நிகழ்த்தியிருந்தார். அவரது சாதனையை தற்போது பெல்ப்ஸ் முறியடித்துள்ளார்.

இவர் இம்முறை பெற்றுள்ள எட்டு தங்கப்பதக்கங்களில் ஆறு தங்கப் பதக்கங்களில் உலக சாதனைகள் முறியடிக்கப்பட்டுள்ளமையும், ஒலிம்பிக் சாதனை முறியடிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற 'எதென்ஸ்' ஒலிம்பிக் போட்டிகளில் பெல்ப்ஸ் ஆறு தங்கப்பதக்கங்களை வெற்றியீட்டிருந்தார். சிலவேளைகளில், பெல்ப்ஸின் சாதனைகள் முறியடிக்கப்படலாம். அது யாரால்? நிச்சயமாக பெல்ப்ஸேதான் அந்த சாதனையை நிகழ்த்தக் கூடியவருமாவார்.

# இலங்கை முன்னேற்றம்



இந்தியாவிற்கு எதிரான டெஸ்ட் தொடரை 2-1 என்ற கணக்கில் இலங்கை வெற்றி கொண்டதன் மூலம், சர்வதேச டெஸ்ட் தரப்படுத்தல் பட்டியலில் இலங்கை அணி நாலாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையே ஒரு புள்ளி வித்தியாசமே உள்ளது. இதேவேளை, இலங்கைக்கு இந்த வருடத்தில் வேறு டெஸ்ட் போட்டிகள் கிடையாது.

ஆனால், இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்கும் இடையே டிசம்பர் மாதம் டெஸ்ட் தொடர் நடைபெறவுள்ளமையால் இந்த இரண்டு அணிகளும் பெறப்போகும் புள்ளிகளின் படி இலங்கையின் ஸ்தானத்தில் மாற்றம் ஏற்படக்கூடிய சாத்தியங்களும் உள்ளன.

தரப்பட்டியல் வருமாறு:

| இடம் | நாடு | புள்ளிகள் |
|---|---|---|
| 1 | அவுஸ்திரேலியா | 138 |
| 2 | தெ.ஆபிரிக்கா | 116 |
| 3 | இந்தியா | 109 |
| 4 | இலங்கை | 108 |
| 5 | இங்கிலாந்து | 104 |
| 6 | பாகிஸ்தான் | 100 |
| 7 | நியூசிலாந்து | 83 |
| 8 | மே.இ.தீவுகள் | 81 |
| 9 | பங்களாதேஷ் | 0 |

# சுசந்திகாவின் பின்னடைவு

பீஜிங் ஒலிம்பிக் போட்டிகளில் இலங்கையின் குறுந்தூர ஓட்ட வீராங்கனையான சுசந்திகா ஜயசிங்ஹ 200 மீற்றர் ஓட்டப்போட்டியில் பதக்கமொன்றைப் பெறக்கூடும் என்ற எதிர்பார்ப்பு கடந்த 20 ஆம் திகதியன்று கனவாகிப் போனமை இலங்கை அபிமானிகளுக்கு பெருத்த ஏமாற்றமாகவே அமைந்துவிட்டது.

முதல் சுற்றின்போது சுசந்திகா தெரிவாகியிருந்த போதிலும் அவரது ஓட்ட வேகமானது திருப்தி தரக்கூடியதாக அமைந்திருக்கவில்லை. மற்றப் போட்டியாளர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் சுசந்திகா போதிய பயிற்சிகளை பெற்றிருக்கவில்லையோ என்றே எண்ணத் தோன்றியது.

மேற்படி, ஒலிம்பிக் போட்டிகளில் 100 மீற்றர், 200 மீற்றர் ஆகிய இரண்டு போட்டிகளிலும் சுசந்திகா கலந்து கொள்வார் என்றே எதிர்பார்க்கப்பட்டது. எனினும், தான் 100 மீற்றர் போட்டியில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று சுசந்திகா அறிவித்தமை பெருத்த ஏமாற்றமாகவே அமைந்தது. அதற்கு அவர் கூறிய காரணம் ஏற்புடையதுதானா என்ற கருத்தும் எழுகின்றது. மன அழுத்தம் காரணமாகவே 100 மீற்றர் போட்டியில் கலந்து கொள்ளவில்லை என்று அவர் கூறியதைப் பார்க்கையில் விளையாட்டு வீரர்கள் எப்போதும் எந்தவொரு அழுத்தத்தையும் தடையையும் வெற்றி கொண்டு போட்டியில் கலந்து கொள்வதே சாதனையாக கருதப்படும்.

எப்படியோ ஒலிம்பிக் போட்டியில் இலங்கை அணிக்குத் தலைமை தாங்கிச் சென்ற சுசந்திகாவும் பளுதூக்கும் வீரர் சிந்தனவும் இரண்டாம் சுற்றுவரை முன்னேறியதையாவது ஆறுதலாகக் கொள்வோம்.



## கெனடா போட்டிகளில் இலங்கையும் இடம்பெறும்

**கெனடாவில் ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ள நான்கு நாடுகள் பங்கு பற்றும் இருபதிற்கு இருபது (20X20) ஓவர் கிரிக்கெட் போட்டிகளில் இலங்கை அணியும் இடம்பெறக்கூடிய வாய்ப்புக்கள் கிட்டியுள்ளன.**

**பாகிஸ்தான், பங்களாதேஷ், மேற்கிந்தியத் தீவுகள், கெனடா ஆகிய நாடுகளே இந்தப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தன. எனினும், இப்போட்டிகள் தொடர்பாக மேற்கிந்தியத் தீவுகளுடன் உரிய புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருக்காததால் ஒகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை நடைபெற இருந்த இந்தப் போட்டிகள் ஒத்தி வைக்கப்பட்டன. எனினும், இத்தகைய நிலையில்தான் பங்களாதேஷ் அணியினால் தற்போது இப்போட்டிகளில் கலந்து கொள்ள முடியாத நிலை தோன்றியிருப்பதனால் பங்களாதேஷுக்குப் பதிலாக தம்மை இணைத்துக் கொள்ளுமாறு இலங்கை கேட்டுக்கொண்டுள்ளது. இதற்கமைய இலங்கையுடன் போட்டி தொடர்பான ஒப்பந்தம் விரைவில் மேற்கொள்ளப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.**


## 'செம்பியன்' கிண்ண போட்டியில் ஆஸி அணி பங்குபற்றாது!

**பாகிஸ்தானில் செப்டெம்பர் 12 ஆம் திகதி நடைபெற ஏற்பாடாகியுள்ள செம்பியன் கிண்ணப் போட்டியில் கலந்து கொள்வதில்லை என்று அவுஸ்திரேலியாவும் அறிவித்துள்ளது.**

**பாகிஸ்தானில் நடைபெற்று வருகின்ற வன்முறை சம்பவங்களின் காரணமாக பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதனால் இப்போட்டியில் தாம் கலந்து கொள்ள முடியாமல் இருப்பதாக அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.**

**இவ்வாறே நியூஸிலாந்து, இங்கிலாந்து, தென் ஆபிரிக்கா ஆகிய அணிகளும் இப்போட்டிகளில் கலந்து கொள்ளுமா என்பதும் கேள்விக்குறியாகவே அமைந்துள்ளது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மருத்துவத்தின் தந்தை ஹிபோக்ரடிஸ்

## பிறப்பிடம்

துருக்கியை அண்டிய சமுத்திர வலயத்தில் மிகவும் பிரசித்தி வாய்ந்த தீவுகள் உள்ளன. இவை 'டெடகெனீஸ்' என அழைக்கப்படுகின்றன. 'கொஸ்' எனும் தீவும் இந்த தீவுப்பகுதிக்குரியதாகும். இந்த 'கொஸ்' தீவுதான் மேற்கத்தேய மருத்துவத்துறையின் தந்தை என்று அழைக்கப்படுகின்ற ஹிபோக்ரடிஸ்ஸின் தாயகமாகும்.

## ஹிபோக்ரடிஸின் பிறப்புக்காலம்

நோய்களுக்கு காரணம் கடவுள் புறக்கணிப்பு, பிசாசுகளின் நடவடிக்கை, சூனியங்கள் என்று நமது முன்னோர்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர். ஆகவே, இவற்றைக் குணப்படுத்த கடவுளின் அருள் பேய்களின் நெருப்பு மற்றும் பயங்கரமான ஒலிகள் ஆகியவற்றின் உதவிகளை அவர்கள் தேடலாயினர். 'மிசர்' இனத்தவர்களும் கிரேக்கர்களும் கடவுள் மீது முழுமையான நம்பிக்கை கொண்டு பூசகர்களை கடவுளாக மதிக்கும் வழக்கத்தினைக் கொண்டிருந்தனர். கி.மு 5 ஆம் நூற்றாண்டு வரை இந்த நிலைமை தொடர்ந்தது. எனினும், அதன் பின்னைய காலகட்டத்தில் தோன்றிய தத்துவவாதிகள் நோய்களுக்குக் காரணம் உடற் செயற்பாடுகளில் ஏற்படும் மாற்றங்களும் சுற்றுப் புறச் சூழலில் ஏற்படும் முரண்பாடுகளும் என்று கண்டறிந்தனர்.

ஹிபோக்ரடிஸின் பிறப்புக்காலமும் இந்த பின்னணியிலேயே அமைகின்றது. அது கி.மு 460 ஆகும். அவர் தனது தந்தையிடமும் ரெக்லைட்டஸ் என்பவரிடமும் அடிப்படைக் கல்வியினைக் கற்றார். தத்துவவியலை கோகியஸ் மற்றும் டிஷோக்ரட்டிஸ் ஆகியோரிடம் கற்றார். ஹிபோக்ரடிஸ் சென்ற இடங்களிலெல்லாம் ஆயிரக் கணக்கான இளைஞர்கள் ஒன்று கூடி அவரின் போதனைகளை செவிமடுக்கவும் மருத்துவத்துறையைக் கற்றுக் கொள்ளவும் ஒன்று திரண்டனர். அவரின் அன்பான நடத்தை, நேர்மை, பிறர் மீது காட்டும் மரியாதை, இயல்பான நடத்தைகள் என்பன சாதாரண மக்களை மட்டுமன்றி மன்னர்களையும் கவர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

***ஹிபோக்ரடிஸ் சிறந்த ஞானியாவார். புத்திஜீவியாவார். எனினும், அதற்காக அவர் ஒருபோதும் பெருமை பாராட்டியதில்லை. தான் அனைத்தும் அறிந்தவர் என்ற தலைக்கனம் மிகுந்தவராகவோ பிறரின் கருத்துக்களை எதிர்ப்பவராகவோ அவர் நடந்து கொண்டதே இல்லை.***

## ஹிபோக்ரடிஸ் மேற்கொண்ட நோயாளிகள் பரிசோதனை

மருத்துவ விஞ்ஞானத்தை தத்துவவியலில் இருந்து வேறுபடுத்த முயன்ற ஹிபோக்ரடிஸ், நோயாளிகளை அக்கறையுடன் பரிசோதித்துப் பார்த்தார். ஒருவரின் நோய் அறிகுறிகளைப் பிறரின் நோய் அறிகுறிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தார். அவற்றை குறிப்பெடுத்து, ஆரோக்கியமான நபருக்கும் நோயாளிக்கும் இடையிலான வேறுபாடுகளை ஒப்பிட்டுப் பார்த்தார். அனுபவத்தினால் பெறப்படும் அறிவு, தகவல்களைச் சேகரித்தல் மற்றும் புரிந்துணர்வு என்பன அவரது கற்றல் செயற்பாடுகளின் விசேட அம்சங்களாக இருந்தன. அதன் ஊடாக நோயாளிக்கு அதிகபட்ச நன்மைகளைப் பெற்றுக் கொடுக்க அவர் முயற்சித்தார்.

## நோய் அவதானிப்பு

மேற்கத்தேய மருத்துவத்துறையில் நோய் நிலைமையை முன்னரே தீர்மானிக்கும் (சிற்சில அறிகுறிகளை கொண்டு நோயை முன்னரேயே இனங்காணல்) முறையை உலகுக்கு அறிமுகப்படுத்தியவர் ஹிபோக்ரடிஸ் தான். நோயாளியின் நோய் குணமடைய அவரது மன நலனும் செல்வாக்குச் செலுத்துவதாக ஹிபோக்ரடிஸ் கூறுகின்றார். அது மட்டுமன்றி, அதனால் மருத்துவர்களின் தரமும் பாதுகாக்கப்படுவதாக ஹிபோக்ரடிஸ் தெளிவுபடுத்துகின்றார். குறிப்பாக, அபாயகட்டத்தில் இருக்கும் ஒரு நோயாளிக்கு சிகிச்சை அளித்ததன் பின்னரும் அந்நோயாளி மரணமடைந்தால் அதனால், மருத்துவர் அபகீர்த்தியை சந்திக்க நேரிடும். எனினும், நோய் நிலைமைகளை முன்னரே அனுமானித்து இனங்கண்டிருப்பின் அதற்கு ஏற்ற உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க மருத்துவருக்கு அவகாசம் கிட்டும் எனக் கூறிய ஹிபோக்ரடிஸ், அதனூடாக நோய் குறித்து வைத்தியருக்கு இருக்க வேண்டிய அறிவினையும் பொறுப்பையும் வலியுறுத்துகின்றார்.

மேலும், நோய்களை ஏற்படுத்துவதில் இயற்கை நிலைமைகளும் தாக்கம் செலுத்துவதனால் அவை பற்றிய அறிவினைப் பெற்றிருப்பதனூடாக வைத்தியரினால் நோயாளிகளுக்குத் தேவையான சிகிச்சையை உடன் வழங்கக்கூடியதாக இருக்கும் எனவும் அவர் தெரிவிக்கின்றார். இன்று போல் அன்றும் மருந்துகளின் தயாரிப்பில் இயற்கை பொருட்கள் பயன்படுத்தப்பட்டன. இயற்கை வளங்களில் மருந்தாகப் பயன்படுத்தக்கூடிய பொருட்கள் இனங்காணப்பட்டதும் அதனை முதன்முதலாகப் பயன்படுத்தியவரும் ஹிபோக்ரடிஸ் ஆவார்.

## மருத்துவம் ஒரு கலை

'மருத்துவம் ஒரு கலை' என்பது ஹிபோக்ரடிஸின் கருத்தாகும். இந்த கலை குறித்து ஹிபோக்ரடிஸுக்கு பேரார்வம் இருந்தது. இது குறித்து அவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்; ''மருத்துவம் என்பது ஒரு கலையாகும். அது கடினமான கலை. அதிகபட்ச ஒழுக்க நிலை மற்றும் மக்கள் மீதுள்ள கருணை என்பனவற்றை அதிலிருந்து ஒருபோதும் பிரித்தெடுக்க இயலாது. இறந்தகாலத்தைப் பற்றி ஆராய்ந்து பாருங்கள்; நிகழ்காலத்தினைத் தீர்மானியுங்கள். எதிர்காலம் பற்றி எதிர்வு கூறுங்கள். இவ்வாறு இந்தக் கலையில் ஈடுபடுங்கள். மனிதன் மீது அன்பு ஏற்படும்போது இந்தக் கலை மீது உங்களுக்குத் தானாகவே ஈடுபாடு ஏற்படும். இந்தக் கலையோ பரந்துபட்டது. ஆனால் வாழ்க்கையோ குறுகியது''.



## ஹிபோக்ரடிஸின் சத்தியப்பிரமாணம்

ஹிபோக்ரடிஸ் மருத்துவத்துறைக்காகவும் நோயாளிகளுக்காகவும் தமது வாழ்க்கையை அர்ப்பணித்தவர். மருத்துவத்துறையின் கீர்த்தி மற்றும் அத்துறையில் ஈடுபடுவோரின் கௌரவம் பாதுகாக்கப்படும் வகையில் செயற்படும் முறை குறித்து அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இன்றும் 'ஹிபோக்ரடிஸின் சத்தியப்பிரமாணம்' முன்னிலையிலேயே மருத்துவர்கள் உறுதி மொழியினை அளித்து தமது கடமையைப் பொறுப்பேற்கின்றனர்.

## மரணம்

கேஸ்லியில் லெரிஸ்ஸா எனும் இடத்திலேயே ஹிபோக்ரடிஸ் உயிர் துறந்தார். எனினும், அவர் எவ்வளவு காலம் வாழ்ந்தார் என்பதற்கான சான்றுகள் இல்லை. பலதரப்பட்டவர்களின் கருத்துக்களின்படி அவர் 85, 90, 104, 105 மற்றும் 109 ஆண்டு காலம் வாழ்ந்ததாக தகவல்கள் கூறுகின்றன.

-பிரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணக்குப் புதிர் 2

(A) மைதானமொன்றின் நீளம் 200 மீற்றர் ஆகவும் அகலம் 90 மீற்றராகவும் உள்ளது. மைதானத்தில் நடைபெறவுள்ள 100 மீற்றர், 200 மீற்றர், 400 மீற்றர் போட்டிகளில் போட்டியாளர்கள் மொத்தம் 32 பேர் கலந்து கொள்ளவுள்ளனர். இதில் 19 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள் 20 பேர் உள்ளனர். 19 வயதுக்கு மேற்பட்ட 22 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள் 400 மீற்றர் ஓட்டப்போட்டியில் மாத்திரம் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர். 15 வயதுக்கு மேற்பட்ட ஆனால் 17 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள் 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் மாத்திரம் கலந்து கொள்ளவுள்ளதோடு இதில் 10 பேர் பங்குபற்றுகின்றனர்.

(i) ஓட்டப்போட்டிகள் நடைபெறும் மைதானம்; (சதுர வடிவமானது/செவ்வக வடிவமானது/நீள்வட்ட வடிவமானது)

(ii) கலந்து கொள்ளவுள்ள ஓட்டப்போட்டியாளர்களின் மொத்த எண்ணிக்கை யாது? ..........

(iii) இதில் 19 வயதுக்கு மேற்பட்டவர்கள் எத்தனை பேர் உள்ளனர்? ..........

(iv) அவர்கள் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ள ஓட்டப்போட்டியின் பிரிவு எது? ..........

(v) * 200 மீற்றர் ஓட்டப்போட்டியில் கலந்து கொள்ள எந்த வயது மட்டத்தினர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்? ..........

** அவர்கள் மொத்தம் எத்தனை பேர்? ..........

(B) இடைவெளியை நிரப்புக

அ) .........., XV, XVII, .......... XXI, XXIII

ஆ) CXXVIII, .........., CXXII, .........., CXVI, ..........

இ) .........., L, .........., LXX, LXXX, ..........

ஈ) LXXV, .........., LXXXV, .........., .........., C

## பொருத்தமான கட்டங்களைத் தெரிந்து ஒட்டுக 1








தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2008.09.03 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 171
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு


## (A) சரியான சொல்லில் கோடிடுக 3

1) Palmyrah - கமுகு/தென்னை/பனை
2) Crab - இறால்/நண்டு/தேள்
3) Shark - சுறா/திமிங்கிலம்/திருக்கை
4) Pomegranate - மாதுளை/விளாம்பழம்/சுரைக்காய்
5) Curd - வெண்ணெய்/தேன்/தயிர்

(B) இணைக்க

| | |
|---|---|
| 1. இரும்பு வேலை செய்பவன் | 1. தச்சன் |
| 2. மீன் பிடிப்பவன் | 2. செம்படவன் |
| 3. மரவேலை செய்பவன் | 3. வண்ணான் |
| 4. தேர் செலுத்துபவன் | 4. கம்புகட்டி |
| 5. துணி வெளுப்பவன் | 5. பாகன் |
| | 6. கொல்லன் |
| | 7. மீகாமன் |

## வழி காட்டுங்கள் 4



## அறிவுக்கு விருந்து 168 விடைகள்

**போட்டி : 01**

1. swing - ஊஞ்சல்
2. grapes - திராட்சை
3. rope - கயிறு
4. cottage - குடிசை
5. cradle - தொட்டில்
6. cinnamon - கறுவா

**போட்டி : 02**

fruit, goodness, studies, qualities, people, life, medicine, fruit, flower, curries, leaves, paper, shoes, history, fruit.

**போட்டி : 03**

(A)
a - மஞ்சள்
b - வெள்ளை
c - நீலம்
d - நீலம்

(B)
a) 27, 36, 45, 54, 63, 72
b) 102, 104, 108, 114, 122, 132
c) 90, 84, 78, 72, 66, 60, 54
d) 33, 30, 27, 24, 21, 18, 15
e) 4, 8, 12, 16, 20, 24, 28

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 168 - பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
ஃ.ப்.கலைஹா, தரம் - 7,
மா/எஸ்மல் பொத மு.ம.வித்., வஹகோட்டை


**போட்டி: 02**
அன்ஷெப் அஹமட், தரம் - 9B,
மாறை/மின்ஹாத் தே.பாட., திக்குவல்லை.

**போட்டி: 03**
ஃப்ரா இஸ்மாயில், தரம் - 9D,
அல்-முபாரக் தே.கல்., மல்வானை.

**போட்டி: 04**
எஸ்.தனுஷன், தரம் - 6E,
கதிரேசன் மத்திய கல்., நாவலப்பிட்டி.

**போட்டி: 05** (குறு.போ-179)
இமேஷா ரோஷன், தரம் - 12(கலை),
ப/அப்புத்தளை த.ம.க., அப்புத்தளை.

## குறுக்கெழுத்துப் போட்டி இல.182 5




### மேலிருந்து கீழ்

01. ஐம்பொறிகளில் ஒன்று.
02. ஐக்கிய அரபு இராச்சியத்தின் இரண்டாவது பெரிய நகரம்; உலகின் மிக உயரமான கட்டடம் அண்மையில் இங்கு கட்டிமுடிக்கப்பட்டது.
03. மீன்களின் உடலில் காணப்படுவது.
05. தேர் என்றும் அர்த்தப்படும்.
06. கூடிய மாத்திரையுடன் உச்சரிக்கும் எழுத்துக்கள்.
07. ஆதரவற்ற பெண்.
08. பால் தயாரிப்பு பண்டமொன்று.
10. துருக்கி/இத்தாலி நாடுகளின் நாணய அலகு.
11. விடை-எதிர்க்கருத்துச் சொல்.

### இடமிருந்து வலம்

01. பாடல் வரிகளுக்கு இனிமை சேர்க்கும் இசை வடிவத்தை இவ்வாறு குறிப்பிடுவர்.
03. மரத்தை விட அளவில் சிறியதாக வளரக்கூடியதை இவ்வாறு அழைப்பர்.
04. புகழ் பெற்ற கவிஞர் ஒருவர்.
06. கடலும் கடல் சார்ந்த இடமும்.
07. நீட்டல் அளவைகளில் ஒன்று.
09. நச்சுத்தன்மையுடையதும் பொதுவாக சுவரில் ஊர்ந்து செல்லக்கூடிய சிறிய ஜந்து.
11. அம்பு எய்வதற்குப் பயன்படுவது.
12. பதவி விலகல் என்றும் அர்த்தப்படுத்தலாம்.

### குறுக்கெழுத்துப்போட்டி 179 விடைகள்

| மேலிருந்து கீழ் | இடமிருந்து வலம் |
|---|---|
| 01. நீதி | 01. நீலகேசி |
| 02. கேசரி | 05. சந்ததி |
| 03. சிந்து | 06. அரிது |
| 04. பதில் | 07. ஆண் |
| 06. அண்டம் | 09. டமஸ்கஸ் |
| 08. அகழி | 11. தும்பு (குழம்பி) |
| 10. மது | |

குறுக்கெழுத்துப் போட்டி -182
"விஜய்" த.பெ.எண். 2037
கொழும்பு

### பாராட்டுப் பெறுவோர்

கே.எல்.எம்.சிஜாத், தரம் - 8,
மட்/செம்மண்ணோடை அல்-ஹம்றா வித்.,
செம்மண்ணோடை-07.

எம்.சுரம்யா, தரம் - 8C,
மா/பாக்கியம் தே.கல்., மாத்தளை.

ஏ.ஆர்.எம்.ரஃபீஸ், தரம் - 7,
அல்-மிஸ்பாஹ் வித்., கல்முனை.

### அன்பு மாணவர்களே!

இது உங்கள் கவனத்திற்கு.....

இனிவரும் போட்டிகளுக்கான விடைகளை நீங்கள் தபாலட்டையில் ஒட்டி எமக்கு அனுப்பி வையுங்கள். விடைகளை அனுப்பும் போது தவறாமல் உங்கள் பெயர், முகவரி, கல்வி கற்கும் தரம், பாடசாலையின் பெயர், அதன் முகவரி, வசிக்கும் நகரம், மாவட்டம் என்பனவற்றையும் எழுதி அனுப்புங்கள். அவை போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை காலதாமதமின்றி சேர்ப்பதற்கு பெரும் துணையாக அமையும். அத்துடன், நீங்கள் உங்களுக்கு விரும்பிய எந்தவொரு போட்டியிலும் கலந்து கொள்ளலாம் என்பதையும் கருத்தில் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பிரச்சினைக்கு கனவில் தீர்வு


வணிக ரீதியிலான தையல் இயந்திரத்தை முதன்முறையாக 1850 ஆம் ஆண்டுகளில் உருவாக்கியவர் ஐசக் சிங்கர். அவர் தையல் இயந்திரத்தை உருவாக்கியபோது, ஒரு கட்டத்தில் ஒரு பிரச்சினையை மட்டும் தீர்க்க முடியாமல் தவித்தார். நூல் அறுந்துபோகாமலும், சிக்கிக் கொள்ளாமலும் தொடர்ச்சியாக ஊசியால் தைக்கச் செய்வது எப்படி என்று சிங்கர் குழம்பிப் போயிருந்தார்.

எப்போதும் அதே நினைவாகவே அவர் இருந்தார்.



ஒருநாள் இரவு உறங்கும் போது, காட்டுவாசிகள் தன்னைத் துரத்துவது போல கனவு கண்டார். அந்தக் காட்டுவாசிகள் அவரை நெருங்கியபோது, அவர்கள் வைத்திருந்த ஈட்டிகளின் நுனியில் ஒரு துளை இருப்பதைக் கண்டார் சிங்கர். திடுக்கிட்டுக் கண் விழித்தார்.

முன்பு ஊசியின் பின்பகுதியில் நூலைக் கோர்ப்பதற்கான துளையை ஏற்படுத்திய அவர், அக்கனவில் வந்த



காட்சிக்கு அமைவாக ஊசியின் நுனிப்பகுதியில் துளையிட்டு, அதன் வழியாக நூலைக் கோர்த்து தைத்துப் பார்த்தார். அது வெற்றிகரமாக அமைய, சிங்கரின் முயற்சி வெற்றி அடைந்தது. அவரது சிங்கர் இயந்திரங்கள் உலகில் அதிகமாக விற்பனையாகும் தையல் இயந்திரங்கள் என்ற பெருமையைப் பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# புராதன பற்சிகிச்சை முறை

பல் வலி ஏற்பட்டால் அல்லது பற்களுடன் தொடர்புடைய வேறு ஏதேனும் கோளாறுகள் ஏற்பட்டால் துரிதமாக பல் மருத்துவரை நாடுவது தற்போது வழக்கமாக இருந்து வருகின்றது. முன்னைய காலங்களிலும் கூட மனிதர்கள் இவ்வாறான நடைமுறையினையே கொண்டிருந்தனர் என்ற உண்மை தெரியவந்துள்ளது. இதன்படி, மருத்துவ விஞ்ஞானமானது, மனித நாகரிக வளர்ச்சியின் ஆரம்பம் முதலே ஏற்பட்டது என்று கருத முடியும். அன்றைய காலகட்டத்திலும் பல் மருத்துவர்கள் இருந்ததற்கான சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

புராதன நாகரிக காலகட்டத்தில் பற்களை சுகாதாரமாகப் பேணுவது குறித்து விதிக்கப்பட்ட 52 சட்டங்கள் அடங்கிய அறிக்கையொன்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதில் நிறம் மங்கிய பற்களை எப்படி சுத்தப்படுத்துவது என்ற விடயம் அடங்கியுள்ளது.

இதன்படி, புராதன கிரேக்க நாட்டில் 2500 வருடங்களுக்கு முன்னர் பற்களைப் பிடுங்கும் நபர் பல் மருத்துவராக இருந்துள்ளார். எனினும், அவர்கள் சொத்தையான பற்களையே பிடுங்கி விடும் வழக்கத்தினைக் கொண்டிருந்துள்ளனர். கி.மு 1400 வரை இந்த நிலைமையே தொடர்ந்துள்ளது. மருத்துவ உபகரணங்களில் ஏற்பட்ட முன்னேற்றங்களை அடுத்து முரசுகளில் வலுவாகப் பொருந்தியிருக்கும் பற்களையும் பிடுங்கி விடுவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டன.



எமது முன்னோர்கள் பல் வலிக்கு என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிக் கூட அறியாமல் இருந்தனர். எனினும், கிரேக்கத்தில் பிள்ளைகளுக்கு பல்வலி ஏற்பட்டவுடன் அதனைக் குறைப்பதற்காக மருந்துகளைப் பாவித்தனர். அதற்கும் முன்னர் பல் வலிக்குரிய சிகிச்சையென நன்கு பழுக்கக் காய்ச்சிய கத்தி முனையை வேதனை தரும் பல் அமைந்துள்ள முரசில் வைப்பதனையே பல் மருத்துவ சிகிச்சை முறையாக அமைந்திருந்தது. மத்திய காலகட்டத்தில்தான் குழி விழுந்த பற்களை அடைக்கும் நடைமுறை ஆம்பமானது. அதற்கான பசையானது மெழுகு மற்றும் எனாமல் ஆகியவற்றினால் தயாரிக்கப்பட்டது. அதன் பின்னைய காலகட்டத்தில் அதற்கென இரும்பு, விசேட ஈயம் மற்றும் தங்கம் என்பன பயன்படுத்தப்பட்டன.

சுமார் 100ஆண்டுகளுக்குப் பின்னர் பல் மருத்துவத்துறையில் செயன்முறைப் பயிற்சிகள் அவசியமாக இருந்தன. அதன்படி 1840 களில் பல் மருத்துவர்களைப் பயிற்றுவிக்கும் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அந்த பயிற்சி நிலையம் பற்சிகிச்சை தொடர்பான 'பல்டிமோர்' கல்வி நிலையம் என அழைக்கப்பட்டது. இங்கு பல் மருத்துவத்துறையானது, தொழில்சார் நிபுணத்துவ மட்டத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. இதன் வளர்ச்சிக் கட்டமே இன்று பற்களை மறுசீரமைக்கும் நவீன சிகிச்சை முறைகளாகும்.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2008, ஓகஸ்ட் மாதம் 27ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday August 27, 2008.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org